தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 21.05.2013 A.M

### நல்லாளக்குப்பம் கிராமத்தில் உழவர் பெருவிழா

உளுந்தூர்பேட்டை வட்டம் திருநாவலூர் ஒன்றியம் நல்லாளக்குப்பம் கிராமத்தில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

விழாவிற்கு திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன் தலைமை வகித்தார்.

கூட்டுறவு வங்கியின் கடன் பிரிவு சங்கத் தலைவர் எம்.பரமாத்மா முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா சேகர் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜ்குமார், சிவபெருமாள், அரவின்ராஜ் ஆகியோர் விதைப் பரிசோதனை உள்ளிட்டவை குறித்து விளக்க மளித்தனர்.

### "தொழில்நுட்பத்தால் மட்டுமே இனி விவசாயம் செழிக்கும்

நவீன தொழில்நுட்பங்களால் மட்டுமே இனி விவசாயம் செழிக்கும் என வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தெரிவித்தார்.

திருக்கோவிலூர் அருகே கொடுக்கப்பட்டு கிராமத்தில் உழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு ஒன்றியக்குழுத் தலைவர் ஆர்.துளசிராஜா தலைமை வகித்தார்.

மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் எஸ்.தங்கராஜ், இளங்கோவன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஏ.கே.தாமோதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சிமன்றத் தலைவர் சி.வெங்கடேசன் வரவேற்றார்.

விழாவில் பங்கேற்ற வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் பேசியதாவது:

தமிழகத்தில் விவசாய சாகுபடி நிலங்கள், நீர் ஆதாரங்கள், தொழிலாளர் வளங்கள் ஆகியவை குறைந்துக் கொண்டே வருகின்றன.

இதனால் வேளாண்மைத் தொழில், தற்போது நலிவடையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கை ஆதாரங்கள் இல்லாத நிலையில், இனி நவீன தொழில்நுட்பங்களால் மட்டுமே விவசாயத்தை செழிக்க வைக்க முடியும்.

இயற்கை வளங்கள் குறைந்த இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு விவசாயம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதனைக் கருத்தில்கொண்டே, விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள், யுத்திகளை அறிமுகப்படுத்தும் வகையில் இந்த உழவர் பெருவிழாவை அரசு நடத்தி வருகிறது என்றார் அவர்.

சென்னை சர்க்கரை ஆலை மேலாளர் பாலகிருஷ்ணன், ஆலோசகர் பாண்டியன், அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர் ஆர்.பாலு, ஆத்மா திட்டத் தலைவர் பி.கங்காதரன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**"46 ஆயிரம் விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கு துவங்கும் பணி நிறைவு'**

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்காக, இதுவரை 46 ஆயிரம் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில், சேமிப்புக் கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 75 ஆயிரத்து 214 விவசாயிகளுக்கு ரூ.26.11 கோடி நிவாரணமாக தமிழக அரசு வழங்கி உள்ளது. இத்தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு வழங்கிகள் மூலமாக, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், வறட்சி நிவாரணம் வழங்குவதற்கான விவசாயிகள் பட்டியல் முழுமையாக இல்லையென புகார்கள் இருந்து வருகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், ஆட்சியர் அன்சுல்மிஸ்ராவிடம் திங்கள்கிழமை புகார் அளிக்கப்பட்டது. தேனூர், சமயநல்லூர் பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர், நிவாரணம் பெறுவதற்கான பட்டியலில் இல்லை. ஆகவே, மறு கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அம்மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இதுகுறித்து ஆட்சியர் அன்சுல் மிஸ்ராவிடம் கேட்டதற்கு, தமிழக அரசு வழங்கியுள்ள வறட்சி நிவாரணத் தொகையை, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 46 ஆயிரம் விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கு துவங்கப்பட்டுள்ளது. இன்னும் 3 நாள்களில் எஞ்சிய விவசாயிகளுக்கும் வங்கிக் கணக்கு துவங்கும் பணி நிறைவு பெறும். வங்கிக் கணக்கு துவங்கிய உடன், வறட்சி நிவாரணத் தொகை அவரவர் கணக்கில் வரவு வைக்கப்படும். சில பகுதிகளில் ஒரே விவசாயியின் பெயர், ஒன்றுக்கும் மேற்பட்ட முறை பட்டியலில் இடம் பெற்றிருந்தது. அவையெல்லாம் சரி செய்யப்பட்டு விட்டன. மாவட்டத்தில் சில இடங்களில், விவசாயிகள் பெயர் விடுபட்டுள்ளதாக புகார் மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

செந்துறை விவசாயிகளுக்கு ரூ.**12.83** லட்சம் வறட்சி நிவாரண நிதி

நத்தம் அடுத்த செந்துறை பகுதியைச் சேர்ந்த 1242 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ.12.83 லட்சம் வழங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்க ரூ.60 கோடியை தமிழக அரசு, மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கியது. அதன் மூலம் மாவட்டத்தில்

நெல், கரும்பு, சோளம், வாழை, தென்னை சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நத்தம் வட்டம் செந்துறை, பிள்ளையார் நத்தம், குடகிப்பட்டி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு செந்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் திங்கள்கிழமை நிவாரண நிதி வழங்கப்பட்டது.

இதற்கான நிகழ்ச்சிக்கு நத்தம் தொகுதி செயலர் ஆர்.வி.என்.கண்ணன் தலைமை வகித்தார். நத்தம் ஒன்றியக் குழுத் தலைவர் ஷாஜஹான் முன்னிலை வகித்தார். இதில் 1242 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ.12.83 லட்சம் வழங்கப்பட்டது. அதற்கான காசோலையை செந்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் கணேசன் உரியவர்களிடம் வழங்கினார்.

### மே 24 விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மே 24ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ.முத்தையா தெரிவித்தார்.

### வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் மனு

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு பகுதி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தர வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் அளிக்க உள்ள மனுக்களை எம்.பி., எம்.எல்.ஏ.,விடம் அப்பகுதி விவசாயிகள் அளித்தனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநில அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகை, வத்திராயிருப்பு வட்டார விவசாயிகளுக்கு விடுபடாமல் கணக்கெடுத்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரை சந்தித்து விவசாயிகள் கோரிக்கை மனு அளிக்க முடிவு செய்தனர்.

இந்த மனுக்களை சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தென்காசி மக்களவை உறுப்பினர் பொ. லிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் தி. ராமசாமி மற்றும் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் வெ. பொன்னுப்பாண்டியன் ஆகியோரிடம் வழங்கினர்.

இவர்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பெறப்பட்ட இந்த மனுக்களை ஆட்சியரிடம் அளித்து வறட்சி நிவாரணம் பெற நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

### திருச்சுழி, நரிக்குடியில் உழவர் பெருவிழா

திருச்சுழி, எம்.ரெட்டியாபட்டி, குல்லம்பட்டி, சித்தலைக்குண்டு கிராமங்களில், உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவில் ஊராட்சித் தலைவர்கள் உத்திரம், ராஜூ தலைமை வகித்தனர். ரெட்டியபட்டி வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி, தொழில்நுட்ப மேலாளர் பிரேமா முன்னிலை வகித்தனர்.

வேளாண் உற்பத்தி பொருள்களை அதிகரிக்கவும், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் அரசின் திட்ட பணிகள் குறித்து விளக்கப்பட்டன. தொழில்நுட்ப கருத்து காட்சி நடந்தது.

பார்த்தீனியம் செடிகளால் உண்டாகும் நோய்கள், எலி ஒழிப்பு, மண் மாதிரி சேகரம், விதை நேர்த்தி, மண்புழு உரம் தயாரித்தல், செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டன.

விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு, இடுபொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன. கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடந்தன. வேளாண் அலுவலர் சந்திரசேகரன், உதவி வேளாண் அலுவலர் மோகன்காந்தி, பொறியியல் துறை கோபிநாத் ஆகியோர் பேசினர். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

### வேளாண் விழிப்புணர்வுப் பேரணி

பாரம்பரிய வேளாண் விளைப் பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி உடுமலை தளி கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்றது .

தளி பேரூராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் இருந்து துவங்கிய இந்தப் பேரணி முக்கிய வீதிகள் வழியாகச் சென்று முடிவுற்றது. இதில் விவசாயிகள் மற்றும் திருமூர்த்தி நகர் ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார். உடுமலை வேளாண் உதவி இயக்குநர் மா.மகாலிங்கம், தளி பேரூராட்சித் தலைவர் தெய்வநாயகி, தோட்டக்கலை, பட்டு வளர்ச்சித் துறை, வேளாண்துறை அலுவலர்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

### வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை: விவசாயிகள் புகார்

தமிழகம் அரசு அறிவித்த வறட்சி நிவாரணத்தை இடைத்தரகர்கள் தலையீட்டால் பெற முடியாமல் தவிப்பதாக காங்கயம் வட்டாட்சியரிடம் விவசாயிகள் திங்கள்கிழமை புகார் அளித்தனர்.

திருப்பூர் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடியை தமிழக அரசு வழங்குகிறது. இதுதொடர்பாக காங்கயம் அருகே, குட்டப்பாளையம், பழையகோட்டை, கண்ணியன்கிணறு, நத்தக்காடையூர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காங்கயம் வட்டாட்சியரைச் சந்தித்து மனு கொடுத்தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

எந்தப் பாகுபாடும் இல்லாமல் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஆனால், காங்கயம் ஒன்றியம், குட்டப்பாளையம் பகுதி ஏழை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க வாய்ப்பே இல்லை என்ற சூழ்நிலை உள்ளது. கிராம நிர்வாக அலுவலகத்தில் அரசு அறிவித்த பயனாளிகளின் விவரப் பட்டியலில் எங்கள் பெயர் சேர்க்கப்படவில்லை. பயனாளிகள் விவரப் பட்டியல் குறித்து கணக்கெடுக்கும்போது மிகப் பெரிய முறைகேடு நடந்துள்ளது. வறட்சி நிவாரண விவரங்கள் சேகரிக்கும்போது, இடைத்தரகர்கள் உதவியுடன் பயனாளிகளின் பெயர்

பட்டியல் தயாரிக்கப்பட்டதால், விவசாயிகளுக்கு முறையாக வறட்சி நிவாரணம் கிடைக்காத சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஏழை விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் வகையில் பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கல்

ராக்கியபாளையம் கிராம விவசாயிகளுக்கு ரூ.9 லட்சம் மதிப்பில் வறட்சி நிவாரண நிதி வழங்கும் விழாவும், பெரியாயிபாளையத்தில் ரேஷன் கடைத் திறப்பு விழாவும் திங்கள்கிழமை நடைபெற்றன.

திருமுருகன்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட ராக்கியாபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற விழாவிற்கு பேரூராட்சித் துணைத் தலைவர் விஸ்வநாதன், ஒன்றியச் செயலாளர் மு.சுப்பிரமணியம் ஆகியோர் தலைமை வகித்தனர்.

கூட்டுறவு சங்கத் தலைவர் பழனிசாமி, துணைத் தலைவர் சுப்பிரமணியம், செயலாளர்(பொ) கி.சுந்தர வடிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட 221 விவசாயிகளுக்கு, ரூ.9 லட்சத்து 44 ஆயிரம் மதிப்பில் நிவாரண நிதியை அவிநாசி எம்எல்ஏ உறுப்பினர் ஏ.ஏ.கருப்பசாமி வழங்கினார்.

இதையடுத்து, பழங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் பெரியாயிபாளையம் அம்பாள் காலனியில் முழு நேர ரேஷன் கடை திறப்புவிழா நடைபெற்றது. பழங்கரை ஊராட்சித் தலைவர் எம்.செந்தில்குமார், கூட்டுறவு சங்கத் தலைவர் துரைசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பவானிசாகர் நீர்மட்டம் 30 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 30 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 388 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.16 டி.எம்.சி.

### கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட 5 டன் மாம்பழங்கள் பறிமுதல்

செய்யாறில் கல் வைத்து பழுக்க வைக்கப்பட்டதாக, 5 டன் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

செய்யாறு பஸ் நிலையம், காந்தி சாலை, மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாம்பழம் விற்பனை செய்யும் கடைகள் மற்றும் குடோன்களில் நகர உணவு பாதுகாப்பு அலுவலர் கே.சீனுவாசன், நகராட்சி துப்புரவு ஆய்வாளர் கே.மதனராசன் உள்ளிட்டோர் திங்கள்கிழமை திடீர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது கார்பைடு கல் வைத்தும், திரவம் தெளித்தும் பழுக்க வைக்கப்பட்டிருந்ததாக 5 டன் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கல் வைத்த மாம்பழங்களை சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி உள்ளிட்ட நோய்கள் ஏற்பட்டு உடலுக்கு கேடு விளைவிக்கும் என்று நகராட்சி அலுவலர்கள் தெரிவித்தனர்.

### சத்தியவாடி, பொன்னூரில் உழவர் பெருவிழா

வந்தவாசியை அடுத்த சத்தியவாடி, பொன்னூர் ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்டக்குழு உறுப்பினர் கே.பாஸ்கர் ரெட்டியார் தலைமை வகித்தார். அதிமுக எம்ஜிஆர் மன்ற மாவட்டச் செயலர் டி.கே.பி.மணி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் நமசிவாயம், பச்சையப்பன், சி.கே.பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தெள்ளாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் வரவேற்றார்.

வந்தவாசி எம்எல்ஏ வே.குணசீலன் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் உள்ளிட்டவற்றை வழங்கி பேசினார். இதில் 10 பேருக்கு களையெடுக்கும் கருவி, 10 பேருக்கு மணிலா ஊட்டச்சத்து உரம், 100 பேருக்கு விதைகள் ஆகியவை வழங்கப்பட்டன.

வேளாண்மை பொறியியல் துறை இளநிலை உதவியாளர் வைரவேல், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் கிறிஸ்டி, விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விவசாய விழிப்புணர்வுப் பேரணி

சேத்துப்பட்டில் வேளாண் துறை சார்பில் விவசாய விழிப்புணர்வுப் பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

இப்பேரணியை ஒன்றியக் குழுத் தலைவர் பத்மாவதி சின்னக்குழந்தை தொடங்கிவைத்தார். நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இப்பேரணி கருத்தரங்கம் நடைபெறும் திருமண மண்டபத்தை அடைந்தது. அங்கு, விவசாயிகளுக்கு இடுபொருள்களை ஒன்றியக் குழுத் தலைவர் பத்மாவதி சின்னக்குழந்தை வழங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை, பேரூராட்சி மன்றத் தலைவர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் அகிலாதேவி, வேளாண்மை உதவி அலுவலர்கள் பாபு,முருகன்,ஜாகீர்உசேன்,ஏழுமலை,பாஸ்கரன்,பட்டுவளர்ச்சி அலுவலர் சந்திரமௌலி, பொறியியல் துறை அலுவலர் ஞானசம்பந்தம், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### வறட்சி நிவாரணம் வழங்குவதில் முறைகேடு

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக ஆட்சியரிடம் விவசாயிகள் புகார் மனு அளித்தனர்.

மோளையானூர் ஊராட்சி மன்றத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லியை சந்தித்து விவசாயிகள் அளித்த மனு:

தருமபுரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் ஆய்வுக்குப் பிறகு, தமிழக அரசால் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மோளையானூரில் கிராமத்தில் வறட்சி நிவாரணம் வழங்குவதில் முறைகேடு நடைபெற்றுள்ளது.

பாக்கு, தென்னை சாகுபடி செய்துள்ள பெரும் விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.22,500 வரையில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.8.5 லட்சம் நிதியை வழங்க 226 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆனால் பருத்தி, மஞ்சள், துவரை போன்ற பயிர்களை சாகுபடி செய்த தகுதிவாய்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தெளிப்பு நீர்ப்பாசன முறையில் விவசாயம்

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகேயுள்ள முள்ளுக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த விவசாயி, மினி தெளிப்பு நீர்ப்பாசனம் முறையைப் பின்பற்றி வறட்சியால் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளித்து விவசாயம் செய்து வருகிறார்.

முள்ளுக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி பாலச்சந்திரன். இவர் தனது 10 ஏக்கர் நிலப்பரப்பில் நெல், மஞ்சள், தென்னை, வெங்காயம், குச்சிக்கிழங்கு, கடலை போன்றவற்றை சாகுபடி செய்து வருகிறார்.

வறட்சியின் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு, சிக்கனமான முறையில் தண்ணீரைப் பயன்படுத்தி, விளை பொருள்களை பயிரிட வேண்டும் என்பதற்காக, மின் தெளிப்பு நீர்க்கருவி மூலம் குறைந்த தண்ணீரில் நீர்பாய்ச்சி கடலை பயிரிட்டுள்ளார்.

ஏற்கெனவே மஞ்சள், வெங்காயம் பயிரிட்டு நல்ல விளைச்சல் கண்டுள்ள இவர், தற்போது தனது அரை ஏக்கர் நிலத்தில் தெளிப்பு நீர்ப் பாசன முறையில் கடலை பயிரிட்டுள்ளார்.

இந்தக் கருவிகள் வாங்க ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் மட்டும் செலவு பிடிப்பதுடன், குறைந்த நீரில் அதிக மகசூல் கிடைப்பதால் இதனை பின்பற்றி விவசாயம் செய்வதாக கூறுகிறார் பாலச்சந்திரன். அரசு 50 சத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசன கருவிகள் கொடுத்தாலும், அதனை விட செலவு குறைவானதும், சிக்கனமான முறையில் நீர் பிடிப்பதாலும், அதிக விளைச்சல் போன்றவற்றால் மினி தெளிப்பு நீர் முறையை தேர்ந்தெடுத்துள்ளதாக கூறுகிறார்.

15 அடி இடைவெளியில் தெளிப்பு நீர்க் கருவிகள் அமைத்து, தெளிப்பான் மூலம் வாரம் ஒரு முறை மட்டுமே நீர் பாய்ச்சுவதால், தண்ணீர் மிச்சப்படுத்தப்படுகிறது என்கிறார் அவர்.

### மே 24, 25-இல் கால்நடைகளுக்கு குடல் புழு நீக்க முகாம்

கறவை பசுக்கள், ஆடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடல் புழு நீக்க முகாம் நாமக்கல்லில் மே 24, 25 (வெள்ளி, சனிக்கிழமை) ஆகிய இரு நாள்கள் நடைபெற உள்ளது.

தமிழக அரசின் விலையில்லா கறவை பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2011-2012ஆம் ஆண்டில் 100 கறவை மாடுகள், 11,624 ஆடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, 2012-2013ஆம் ஆண்டில் 100 கறவை பசுக்கள், 14,296 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, இரு ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஆடுகள் 13,990 குட்டிகளை ஈன்றுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பசுக்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஆடுகளின் எடையை கூட்டவும் 2011-2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கறவை பசுக்கள், ஆடுகளுக்கு வெள்ளிக்கிழமையும் (மே 24), 2012-2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கறவை பசுக்கள், ஆடுகளுக்கு சனிக்கிழமையும் (மே 25) இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், குடல்புழு நீக்க முகாமும் நடத்தப்பட உள்ளன.

அந்தந்த கால்நடை மருந்தகங்களில் நடத்தப்படும் இந்த முகாம்களில் விலையில்லா கால்நடைகள் மட்டுமன்றி அனைத்து விவசாயிகளும் தங்களிடம் உள்ள கால்நடைகளை கொண்டு வந்து பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சேலம் மாவட்டத்தில் மரங்கள் வளர்க்கும் திட்டம்

சேலம் மாவட்டத்தில் மரங்கள் வளர்க்கும் திட்டம் ரூ.7 கோடியில் அமல்படுத்தப்பட உள்ளதாக சேலம் மண்டல வனப் பாதுகாவலர் கணேசன் தெரிவித்தார்.

மேட்டூர் காவல் நிலைய வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட வனப் பாதுகாவலர் கணேசன் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழக முதல்வரின் பிறந்த நாளையொட்டி, சேலம் மாவட்டத்தில் 2,03,025 மரக் கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மாவட்டம் முழுவதும் 6,500 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இதில் 25 சதம் வனப் பகுதியில் நடப்படுகிறது. தனியார் மற்றும் அரசு அலுவலகங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. வனவிலங்கள் வனத்தை விட்டு வெளியே வருவதைத் தடுக்க கிராமங்களை ஒட்டியுள்ள வனப் பகுதிகளில் செயற்கை நீர் நிலைகளை உருவாக்கி வருகிறோம்.

வனப் பகுதிகளில் வனவிலங்களுக்கு தண்ணீர் தொட்டிகள் அமைக்கும் திட்டம் அரசின் அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்படும். வனவிலங்களால் பட்டா நிலங்களில் சேதம் ஏற்பட்டால், அதற்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சந்தன மரங்களை பெருக்க ஏற்கெனவே உள்ள மரங்களோடு சந்தன மரங்களையும் சேர்த்து வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. பாலமலையில் கிரீன் இன்டியா மிசன் திட்டத்தில் இந்த சந்த மரங்களும் வளர்க்கப்படும். சேலத்திலிருந்துதான் திப்பதி கோயிலுக்கு சந்தன மரங்கள் செல்கின்றன.

சேலம் மாவட்டத்தில்

ரூ.7 கோடியில் 7 ஆயிரம் ஹெக்டேரில் மரங்கள் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் நீர் ஆதாரங்களைப் பெருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

மண்வளப் பாதுகாப்பு அலுவலர் லோகநாதன், மேட்டூர் மண்வளப் பாதுகாப்பு வனச்சரகர் கோ.பழனிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

### உடையார்பாளையத்தில் உழவர் பெருவிழா

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் அருகேயுள்ள உடையார்பாளையத்தில் வேளாண் துறை சார்பில், திங்கள்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவில் ஜயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ. இளங்கோவன் பங்கேற்று, துறையின் மூலம் வழங்கப்படும் மானிய திட்டங்கள், சாகுபடி தொழில்நுட்பங்கள், பண்ணைக் குட்டைகள் அமைப்பது குறித்து பேசினார்.

மண் பரிசோதனையின் அவசியம், இயற்கை பொருள்களான இளநீர், பருத்தி ஆடைகள், சீயக்காய் பயன்பாடுகள், நன்மைகள் குறித்து வேளாண் அலுவலர் நா.கலைச்செல்வி பேசினார். நெல் விதை நேர்த்தி குறித்த செயல்விளக்கத்தை உதவி வேளாண் அலுவலர் சுப்பிரமணியன் செய்து காட்டினார்.

விழாவை முன்னிட்டு நடைபெற்ற இலவச கால்நடை மருத்துவ முகாமில் உதவி கால்நடை மருத்துவர் புகழேந்தி பங்கேற்று, கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தார்.

விழாவில் வேளாண் துணை அலுவலர் பொய்யாமொழி, விதைச்சான்று அலுவலர் காசிநாதன், வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் கலைமணி, தோட்டக்கலை உதவி அலுவலர் பெருமாள், வேளாண் வணிகத் துறை உதவி அலுவலர் நல்லகுமார், பட்டுபுழு வளர்ப்புத் துறையைச் சேர்ந்த உலகநாதன் ஆகியோர் பங்கேற்று, தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து பேசினார்.

விழா ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஆதிநாராயணன், அட்மா தொழில்நுட்ப வல்லுநர் முருகன் ஆகியோர் செய்திருந்தனர். விழாவின் நிறைவில் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

### வறட்சி நிவாரணம் அளிப்பு

பொன்னமராவதி அருகே உள்ள திருக்களம்பூர் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயிகளுக்கு தமிழக அரசின் வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். செயலர் கே. துரையரசன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு ரூ. 13 லட்சத்து 21 ஆயிரத்து 930 ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது. துணைத் தலைவர் சொக்கன்,இயக்குனர்கள் நெ. ராமச்சந்திரன், மணி, பாஸ்கரன், பழனிச்சாமி, சத்தியப்பிரியா,சுசிலா, மனோன்மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சோலார் மின்சாரம்: விவசாயிகள் முன் பதிவு செய்யலாம்

அரசு மானியத்தில் சூரிய ஒளி மின்சாரம் மூலம் மின் மோட்டாரை இயக்க விவசாயிகள் முன்பதிவு செய்யலாம் என்றார் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் ஆர். சதானந்தம்.

ஆலங்குடி அருகேயுள்ள கொத்தமங்கலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அவர் மேலும் பேசியது:

மின் பற்றாக்குறையால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தகடுகளையும், மின் மோட்டார்களையும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க தமிழக அரசு அறிவித்துள்ளது.

ரூ. 5 லட்சத்தில் ரூ. 4 லட்சத்தை அரசே மானியமாக செலுத்துகிறது. எஞ்சிய ரூ. 1 லட்சத்தை விவசாயி செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெற 5 எச்.பி. மோட்டாரை 200 அடி ஆழம் வரை மட்டுமே பயன்படுத்தும் விவசாயிகள் ஆலங்குடி வேளாண் அலுவலகத்தில் ரூ. 10 ஆயிரம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் மழைநீர் சேகரிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும். தண்ணீர், இடுபொருளை சிக்கனமாக, உரியநேரத்தில் பயன்படுத்துவது அவசியம்.

கோடைகாலத்தில் பாரம்பரிய முறையிலான சத்து நிறைந்த இளநீர் பருகுவதையும், பருத்தி ஆடை உடுத்துதல், சீகக்காய் பவுடர் பயன்படுத்துவது குறித்து மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் பழமைகளைக் கடைப்பிடிக்க கோரி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரைதனசேகரன் தொடக்கி வைத்தார்.

வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார் உள்ளிட்டோர் பேசினர். அட்மா விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவர் தினகரசாமி, கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர் சு. சேகர், ஊராட்சி துணைத் தலைவர் ச.ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் செய்தனர்.

நிகழ்ச்சியில் வயலில் எலி ஒழிப்பு, வாழைக்கன்று கரணை நோ0த்தி, குழித்தட்டு முறையில் நாற்று தயாரித்தல் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

## வறட்சி நிவாரண பயனாளிகள் பட்டியலில் முறைகேடு புகார்

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டத்தைச் சேர்ந்த தேராவூர், கொடிக்கால்பட்டி கிராமங்களில் வறட்சி நிவாரணம் பெறும் பயனாளிகள் பட்டியலில் முறைகேடு நடந்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் செ. மனோகரனிடம் திங்கள்கிழமை புகார் அளித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அவர்கள் அளித்த மனு விவரம்:

இலுப்பூர் வட்டத்துக்குள்பட்ட தேராவூர் ஊராட்சியில் விவசாயிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட வறட்சி நிவாரண பயனாளிகள் பட்டியல் மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிக்கு வந்துள்ளது.

அதில் உண்மையாகவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் யாருடைய பெயரும் இல்லாமல் ஊர் முக்கிய பிரமுகர்கள், அரசியல் செல்வாக்கு பெற்றவர்களுக்கு ரூ. 60 ஆயிரம் வரை நிவாரணம் கிடைக்கும் வகையில் பட்டியல் உள்ளது.

இதனால் நாங்கள் அதிர்ச்சியடைந்து இலுப்பூர் வட்டாட்சியரிடம் கேட்டதற்கு விஏஓ, ஆர்.ஐ., வேளாண் விரிவாக்க அலுவலர் ஆகியோரால் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, எனவே மாவட்ட ஆட்சியர் இதை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல, அதே பகுதியிலுள்ள கொடிக்கால்பட்டி கிராமத்தை சேர்ந்த பொதுமக்களும் தங்களுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை, பட்டியலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர்கள் விடுபட்டுள்ளதாக ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

### கும்பகோணம் அருகே நெல் பயிர்கள் கருகும் அபாயம்

கும்பகோணம் அருகே தொடர் மின் இணைப்பு துண்டிப்பின் காரணமாக, தண்ணீர் கிடைக்காமல் நெல் பயிர்கள் கருகும் நிலையை அடைந்துள்ளன.

கும்பகோணம் அருகேயுள்ள மேலக்கொட்டையூர் பகுதியில் கடந்த 12, 15-ம் தேதிகளில் அடுத்தடுத்து வீசிய திடீர் சூறாவளிக் காற்றினால் 6 மின் கம்பங்கள் வயல்வெளியிலேயே சாய்ந்தன. இதனால், இந்தப் பகுதியில் கடந்த ஒருவாரமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

கோடைகாலத்தில் நாள்தோறும் வரும் 3 மணி நேர மும்முனை மின்சாரத்தை நம்பி பயிரிடப்பட்டு 20 நாள்களே ஆன நெற்பயிர்கள் தொடர்ந்து ஒருவார காலமாக தண்ணீர் விடமுடியாத சூழ்நிலையில் கடும் வெயிலின் காரணமாக காய்ந்து கருக தொடங்கி விட்டன.

மேலும், வயல்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் கடன் வாங்கி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சிலருக்கு இழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

"சேதமடைந்த மின்கம்பங்களை உடனடியாக சரி செய்து தர வேண்டும் என்று கோரி, மேலக்காவேரி மின்வாரிய அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டது.

ஆனால், இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என விவசாயிகள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து தங்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை மின்வாரியம் வழங்கவேண்டும் என்றும், அலட்சியமாக செயல்படும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து மேலக்காவேரி மின்துறை ஊழியர்கள் கூறியது: தற்போது வயல்பகுதிகள் ஈரமாக உள்ளதால் பணிகள் மேற்கொள்ள தாமதமாகிறது.

மின்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, புயல்காற்றில் 100-க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சாய்ந்துவிட்டன. தற்போது 40-க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சரி செய்யப்பட்டு விட்டன.

சாலைப்பகுதிகள் மற்றும் நீர்நிலைகளில் சாய்ந்த மின்கம்பங்களை முன்னுரிமை கொடுத்து சரி செய்து வருகிறோம். மின்கம்பங்கள் இல்லாத காரணத்தால் பணிகள் தாமதமாகின்றன என்றார்.

### நாகை: மே 31-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை (மே 31) மாலை 3.30 மணிக்கு நடைபெறுகிறது.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெருகவாழ்ந்தானில் வேளாண் நிபுணர்கள் இன்று கலந்துரையாடல்

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை (மே 21) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறை (அட்மா) சார்பில் பசுந்தாள் உரப் பயிர்கள் சாகுபடி குறித்த விவசாயிகள் மற்றும் வேளாண் நிபுணர்களின் கலந்துரையாடல் மற்றும் கருத்துக்காட்சி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா சிறப்புரையாற்றுகிறார். கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராம சாமி, வேளாண் துறை இயக்குநர் எம். ராஜேந்திரன், சென்னை பயறு வகைப் பயிர்கள் மற்றும் சிறுதானிய பயிர்கள் உயர்மட்டக்குழு உறுப்பினர் பி.என். வேதநாராயணன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழு உறுப்பினர் மன்னார்குடி எஸ். ரெங்கநாதன் உள்ளிட்டர் பங்கேற்கின்றனர். விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் பங்கேற்கலாம்.

### தோவாளை கால்வாயில் தண்ணீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்

நிலத்தடி நீர் ஊற்றை பாதுகாக்க தோவாளை கால்வாயில் தண்ணீர் திறந்து விட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜனை சந்தித்து விவசாயிகள் திங்கள்கிழமை வலியுறுத்தினர்.

தோவாளை வட்டம், கடுக்கரை, காட்டுப்புதூர், ரத்தினபுரம், தெள்ளாந்தி, அனந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 50 பேர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியுள்ளதாவது:

தெள்ளாந்தி, ரெத்தினபுரம், காட்டுப்புதூர், கடுக்கரை, அனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவுகிறது. குளங்கள் தண்ணீரின்றி வறண்டு கிடக்கின்றன. இதனால் இந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் ஊற்று குறைந்து விட்டது. குடிதண்ணீருக்கும் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் நிலத்தடி நீர் ஊற்றை அதிகரிக்க பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டது.

ஆனால் தோவாளை கால்வாயில் தண்ணீர் வரவில்லை.

எனவே கால்வாயில் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

## புதூர்பாண்டியாபுரத்தில் உழவர் பெருவிழா நிறைவு

ஓட்டப்பிடாரம் அருகே புதூர்பாண்டியாபுரத்தில் வேளாண் துறை சார்பில் நடைபெற்று வந்த உழவர் பெருவிழா சனிக்கிழமை நிறைவடைந்தது. விழாவுக்கு புதூர்பாண்டியாபுரம் ஊராட்சித் தலைவர் இரா. முனியசாமி தலைமை வகித்தார். அரசின் நலத்திட்டம், விவசாயிகள் மானியம் பெறுவது குறித்து ஓட்டப்பிடாரம் வேளாண் உதவி இயக்குநர் டேவிட் டென்னிசனும், மண் மாதிரி, கோடை உழவின் நன்மைகள் குறித்து துணை வேளாண் அலுவலர் தங்கத்துரையும் விவரித்தனர்.

கருத்துக் கண்காட்சி, செயல்விளக்கங்களை வேளாண் உதவி அலுவலர் எஸ். சிக்கந்தர்பாட்ஷா செய்து காட்டினார். அட்மா தொழில்நுட்ப வல்லுநர் வி. செல்வக்குமார் நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.05.2013 A.M**

---

**கண்ணீர்!தென்னை பயிரிட்ட விவசாயிகள்... மணல் கொள்ளையால் பரிதாபம்**

கரூர்: கரூர் மாவட்டத்தில் உள்ள காவிரியாற்று பகுதியில், நன்னியூர், நெரூர் வடபாகம், கடம்பங்குறிச்சி, அச்சமாபுரம், ராஜேந்திரம், திருக்காம்புலியூர், வைகைநல்லூர் ஆகிய பகுதிகளில் மணல் அள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, மணல் எடுப்பது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளை, மதுரை உயர்நீதிமன்றம் விதித்தது.

ஆனால் உயர்நீதிமன்றம் உத்தரவு காற்றில் பறக்க விட்டு, மாயனூர் முதல், பெருகமணி வரை, தடையில்லாமல் மணல் கொள்ளை நடந்து வருகிறது.

இதை பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறையினர் வேடிக்கை பார்த்து வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, கரூர் மாவட்டத்தில் தென்னை சாகுபடி, நான்காயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நடந்து வந்தது. இதற்கு தண்ணீர் அதிகளவு தேவை என்பதால், காவிரி ஆற்று படுகையில், பெரும்பாலும் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் இப்பகுதியில் மணல் திருட்டின் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து, தென்னை மரங்கள் அழியும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இதுகுறித்து வேளாண் அதிகாரி கூறியதாவது:

இரண்டு அடி ஆழம், நூறு அடி நீளம் வரை, தென்னை வேர், தனக்கு தேவையான தண்ணீரை தேடி ஊறிஞ்சி கொள்ளும் திறன் கொண்டது. அதன், வேர் அதிக நீளம் செல்லக்கூடியதே தவிர, அதிக ஆழம் செல்ல முடியாது. மேலும் தென்னை மரத்துக்கு ஒரு நாளைக்கு, 50 லிட்டர் வரை தண்ணீர் தேவைப்படுகிறது.

காவிரி ஆற்றுப்படுகையில் அளவில்லாமல் மண் அள்ளப்படுவதால், நிலத்தடி மட்டம் அதல பாதளத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. தென்னை மரங்கள், தனக்கு தேவையான நீரை ஊறிஞ்ச முடியாததால், அவைகள் கருகும் அபாயநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒரு தென்னை மரம் பட்டு போய்விட்டால், மீண்டு துளிர்க்க வாய்ப்பு மிகவும் குறைவாகும்.

தென்னை மரம் நீண்டகாலம் பலன் கொடுக்கும் பயிர் என்பதால், விவசாயிகளுக்கு தாங்க முடியாத நஷ்டம் ஏற்படும்.

ஆற்று பகுதிகளில், 15 அடி ஆழம் வரை மணல் பொக்லைன் மூலம் அள்ளப்படுகிறது. ஆதலால்,

10 அடியில் தண்ணீர் கிடைத்த நிலை மாறி, 250 அடிக்கு போர்வெல் அமைத்தால் கூட நிலத்தடி நீர் கிடைக்கவில்லை. வெள்ள நேரங்களில் மணல் அரிப்பை தடுத்து, தண்ணீர் செல்லும் வேகத்தை மரங்கள் குறைக்கும். ஆனால் ஆற்றின் ஓரங்களில் மரங்கள் கோடையின் வெப்பத்தை தாங்கும் சக்தி கொண்ட பனை உட்பட பெரும்பாலன மரங்கள் கருகி வருகின்றன. அளவுக்கு மீறி மணல் அள்ளப்படுதாலும், மரங்கள் கருகி வருவதாலும், வெள்ள காலங்களில் ஊருக்குள் வெள்ளநீர் புகும் அபாயம் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர் மணல் கொள்ளையால், விவசாய உற்பத்தி பாதிப்பதோடு, மிகப்பெரிய சுற்றுச்சூழல் மாசுப்பாட்டை ஏற்படுத்தும். எனவே பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் அலட்சியம் காட்டாமல், மணல் அள்ளுவதை முறைப்படுத்த வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**களைகட்டும் சாலையோர காய்கறி விற்பனை விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய்**

வாலாஜாபாத்:அப்போது தான் செடிகளில் இருந்து பறித்து வந்து, விற்பனை செய்யப்படுவதால், சாலை ஓர கடைகளில், காய்கறி விற்பனை கனஜோராக நடக்கிறது.வாலாஜாபாத் - தாம்பரம் செல்லும் சாலையில் நத்தாநல்லூர், தேவரியம்பாக்கம், வாரணவாசி உள்ளிட்ட பல்வேறு கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் தோட்டக்கலைப் பயிர்களான, கத்தரிக்காய், பாகற்காய், முள்ளங்கி, கீரை, வெண்டை உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இவற்றை மொத்த வியாபாரிகளுக்கு, விற்பனை செய்வதிலும், சில்லரையாக விற்பனை செய்வதிலும், இப்பகுதி விவசாயிகள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.சில்லரை விற்பனைவாலாஜாபாத் - தாம்பரம் சாலையில், நிழல் தரும் மரங்களின் அடியில், இந்த சில்லரை காய்கறி விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. இச்சாலையில், 10க்கும் மேற்பட்ட இடங்களில், காய்கறி கடைகள் உள்ளன. அவ்வழியே செல்லும் வாகன ஓட்டிகள், பயணிகள் தங்களுக்கு தேவையான காய்கறிகளை வாங்கிச்செல்கின்றனர்.இதுகுறித்து, வாகன ஓட்டி பரசுராமன் கூறுகையில், ""தோட்டம் அருகே, விற்பனை செய்யப்படும் காய்கறிகள், "பிரஷ்' ஆக இருக்கின்றன. கடைகளில், வாடி, வதங்கிய காய்கறிகளே கிடைப்பதால், வாய்ப்பு கிடைக்கும் போது, இங்கு விற்கும் காய்கறிகளை வாங்கிச் செல்கிறேன். இந்த காய்கறிகளை கொண்டு சமைக்கப்படும் உணவு, உண்மையிலேயே மிகவும் ருசியாக இருக்கும்," என்றார்.கூடுதல் வருவாய்இதுகுறித்து, தேவரியம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், ""அவ்வப்போது, செடிகளில் இருந்து பறித்து வந்து, காய்கறிகளை விற்கிறோம். கார், இருசக்கரவாகனங்களில் செல்வோர் வாங்கி செல்கின்றனர். இதன் மூலம், எங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது," என்றார்.

**"காய்கறி கிடங்கு அமைக்க வேண்டும்' ஸ்ரீபெரும்புதூர் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

ஸ்ரீபெரும்புதூர்:வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில், காய்கறி கிடங்கு அமைக்க வேண்டும் என, காய்கறி சாகுபடி வியாபாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் என, இரண்டு ஒன்றியங்கள் அமைந்துள்ளன.வட்ட அளவில், 49,850 ஏக்கர் நன்செய் நிலங்கள், 36,656 ஏக்கர் புன்செய் நிலங்கள் உள்ளன. 60,602 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள், 2,663 ஏக்கர் மானாவாரி நிலங்கள் என, 1,49,771 ஏக்கர் நிலங்கள் உள்ளன.காய்கறி சாகுபடிஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், எடையார்பாக்கம், கோட்டூர், கப்பான்கோட்டூர், பட்டுமுடையார்குப்பம், மாரிமங்கலம், குணகரம்பாக்கம், பிச்சிவாக்கம், கண்டிவாக்கம், துளசாபுரம், சிவபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், கத்தரி, வெண்டைக்காய், புடலங்காய், கீரை வகைகள், பூச்செடிகள் உள்ளிடட்ட பணப்பயிர்களை பயிரிடுகின்றனர்.இங்கு விளையும் காய்கறிகளை, சென்னை கோயம்பேடு, காஞ்சிபுரம், திருவள்ளூர் தினசரி மார்க்கெட்டிற்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளது. விவசாயத்திற்கு போதுமான ஊழியர்கள் இல்லாததால், குடும்ப உறுப்பினர்களே, விவசாயப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில், காய்கறி, பூக்களை மார்க்கெட்டிற்கு கொண்டு செல்ல முடியாமல் திணறுகின்றனர்.கோரிக்கைஇதனால், தங்களை தேடி வரும் காய்கறி புரோக்கர்களிடம், மொத்தமாக குறைந்த விலைக்கு விற்பனை செய்து விடுகின்றனர். இதனால், எடையார்பாக்கம் மற்றும் சுற்றுவட்டார கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பயனடையும் வகையில், வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில், பதப்படுத்தப்பட்ட கிடங்கு அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சவுக்கு தோப்பில் ஊடுபயிராக வேர்க்கடலை சாகுபடி**

காஞ்சிபுரம்:சவுக்கு தோப்பில் ஊடுபயிராக, வேர்க்கடலை சாகுபடி செய்வதில், வெங்கச்சேரி கிராம விவசாயிகள், ஆர்வம் காட்டி வருகின்றனர்.காஞ்சிபுரம் - உத்திரமேரூர் சாலையில், வெங்கச்சேரி கிராமம் உள்ளது. இப்பகுதி விவசாயிகள், நெல், கரும்பு, சவுக்கு, வேர்க்கடலை மற்றும் தோட்டக்கலை பயிர்களான கத்திரி, வெண்டை மற்றும் கீரை வகைகளை சாகுபடி செய்வது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக, நீர் பற்றாக்குறை மற்றும் பயிர்களில் நோய் தாக்குதல் அதிகரித்து காணப்படுவதால், பெரும்பாலான விவசாயிகள், சவுக்கு பயிரை சாகுபடி செய்ய துவங்கி விட்டனர்.ஐந்தாண்டு பயிரான சவுக்கை சாகுபடி செய்ய, குறைந்த நீர் பாசனம் மற்றும் குறைவான பராமரிப்பு செலவு என்பதால், அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, இதில், ஊடுபயிராக, வேர்க்கடலை சாகுபடிசெய்து வருகின்றனர்.இதுகுறித்து, அப்பகுதி விவசாயி கோபால்சிங், 73. கூறியதாவது:வறட்சி காரணமாக, இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக,

நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், குறைந்த நீரில் விளையும் பயிர்களை தேர்வு செய்து, சாகுபடி செய்து வருகிறோம். அந்த வகையில், சவுக்கு பயிரை அதிகமானோர் பயிரிட்டுள்ளனர். தற்போது, இதில், ஊடுபயிராக வேர்க்கடலை விதைத்துள்ளனர். செடிகள் நன்றாக வளர்ந்து, அறுவடைக்கு தயாராகி உள்ளன. இதன் மூலம், ஒரு ஏக்கருக்கு, 30 - 35 ஆயிரம் ரூபாய் வரை, லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்

காஞ்சிபுரம்:சவுக்கு தோப்பில் ஊடுபயிராக, வேர்க்கடலை சாகுபடி செய்வதில், வெங்கச்சேரி கிராம விவசாயிகள், ஆர்வம் காட்டி வருகின்றனர்.காஞ்சிபுரம் - உத்திரமேரூர் சாலையில், வெங்கச்சேரி கிராமம் உள்ளது. இப்பகுதி விவசாயிகள், நெல், கரும்பு, சவுக்கு, வேர்க்கடலை மற்றும் தோட்டக்கலை பயிர்களான கத்திரி, வெண்டை மற்றும் கீரை வகைகளை சாகுபடி செய்வது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக, நீர் பற்றாக்குறை மற்றும் பயிர்களில் நோய் தாக்குதல் அதிகரித்து காணப்படுவதால், பெரும்பாலான விவசாயிகள், சவுக்கு பயிரை சாகுபடி செய்ய துவங்கி விட்டனர்.ஐந்தாண்டு பயிரான சவுக்கை சாகுபடி செய்ய, குறைந்த நீர் பாசனம் மற்றும் குறைவான பராமரிப்பு செலவு என்பதால், அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, இதில், ஊடுபயிராக, வேர்க்கடலை சாகுபடிசெய்து வருகின்றனர்.இதுகுறித்து, அப்பகுதி விவசாயி கோபால்சிங், 73. கூறியதாவது:வறட்சி காரணமாக, இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக, நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், குறைந்த நீரில் விளையும் பயிர்களை தேர்வு செய்து, சாகுபடி செய்து வருகிறோம். அந்த வகையில், சவுக்கு பயிரை அதிகமானோர் பயிரிட்டுள்ளனர். தற்போது, இதில், ஊடுபயிராக வேர்க்கடலை விதைத்துள்ளனர். செடிகள் நன்றாக வளர்ந்து, அறுவடைக்கு தயாராகி உள்ளன. இதன் மூலம், ஒரு ஏக்கருக்கு, 30 - 35 ஆயிரம் ரூபாய் வரை, லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**வேளாண் பொறியியல் கருவிகளை பெறுவதில் சிக்கல் திருக்கழுக்குன்றம் விவசாயிகள் அலைச்சல்**

மாமல்லபுரம்:விவசாய பொறியியல் கருவிகளை பெற, சென்னைக்கு அலைய வேண்டி உள்ளதாக, திருக்கழுக்குன்றம் தாலுகா விவசாயிகள் புலம்புகின்றனர்.திருக்கழுக்குன்றம் தாலுகா, விவசாயத்திற்கு முக்கியத்துவம் பெற்றது. இப்பகுதியில் உள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில், நெல், கரும்பு, மணிலா, காய்கறிகள் போன்றவை பயிரிடப்படுகின்றன. இதனால், விவசாயத்திற்கான பொறியியல் இயந்திரங்கள், கருவிகள், விவசாய மானியம் போன்றவை விவசாயிகளுக்கு அத்யாவசியமாகிறது.மானியம்விவசாயிகளுக்கு இவற்றை வழங்க,

வேளாண்மை பொறியியல் துறை இயங்குகிறது. மத்திய, மாநில அரசுகள், விவசாயத்திற்கு அறிவிக்கின்ற மானிய திட்டங்களை, இத்துறை அலுவலகம் மூலம், விவசாயிகள் அறிந்துகொள்வர்.மேலும், ஏரி, குளம் ஆகிய நீர் நிலைகளை தூர்வாரி, விவசாய நீர்வளத்தை பெருக்குதல், நீர் ஆதார பகுதிகளை கண்டறிதல், வேளாண்மை நிலப்பகுதியை சமன் செய்தல் ஆகிய வேளாண்மை மேம்பாட்டு பணிகளையும், இத்துறை மேற்கொள்கிறது. இதனுடன், விவசாயிகளுக்கு டிராக்டர், நவீன நடவு இயந்திரம், தெளிப்பான், பவர் டிரில்லர், நீர் மூழ்கி மோட்டார் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகின்றன. இவை, வாடகைக்கும் அளிக்கப்படுகின்றன.அலைச்சல்சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம், டிராக்டரில், பலவித கலப்பை பொருத்தி உழுதல் போன்ற விவசாய முறைகள் குறித்து, பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இத்துறை அலுவலகம், திருக்கழுக்குன்றம் தாலுகாவில், இதுவரை அமைக்கப்படவில்லை. தாலுகா தலைநகரமான திருக்கழுக்குன்றத்தில் இயங்க வேண்டிய இத்துறை அலுவலகம், சென்னை நந்தனத்தில், தலைமை அலுவலக வளாகத்தில், நீண்ட காலமாக இயங்கி வருகிறது.இதனால், இப்பகுதி விவசாயிகள், மானிய விவரங்களை அறிதல், விண்ணப்பித்தல், பங்குத்தொகை செலுத்துதல், மானிய பட்டியலில், பெயர் சேர்க்கை விவரம் அறிதல், மானியம் பெறுதல், வாடகைக்கு இயந்திரங்கள் பெறுதல் ஆகியவற்றுக்காக, சென்னை செல்ல வேண்டி உள்ளது. அனைத்து தேவைகளுக்கும், பல நாட்களுக்கு சென்னைக்கு அலைகின்றனர். இதனால், பணம் மற்றும் காலவிரயம் போன்ற பிரச்னைகளால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.அமையுமா?இதுகுறித்து, விவசாயி ஒருவர் கூறுகையில், ""விவசாயம் தொடர்பான அனைத்து தேவைகளுக்கும், சென்னைக்கு செல்வதால், கடுமையாக பாதிக்கிறோம். எனவே, இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி, திருக்கழுக்குன்றத்தில் அலுவலகம் அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார். இத்துறை உதவி பொறியாளர் ஒருவர் கூறுகையில், ""திருக்கழுக்குன்றத்தில் அலுவலகம் செயல்பட உயரதிகாரிகள் தான் முடிவெடுக்க வேண்டும்," என்றார்.காரணம் என்ன?சென்னையில் அலுவலகம் இயங்குவதற்கான காரணம் குறித்து, விவசாயி ஒருவர் கூறுகையில், ""இத்துறை அலுவலகத்தில், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்கள், அலுவலக ஊழியர்கள் என, 50க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர். சென்னை அலுவலகம் எனில், நகர வீட்டுப்படி மற்றும் பிற சலுகைகள் அளிக்கப்படும். திருக்கழுக்குன்றத்தில் அலுவலகம் இயங்கினால், சலுகைகள் கிடைக்காது. சலுகைகள் பெறவே, விவசாயிகளை புறக்கணித்து, சென்னையில் அலுவலகம் இயங்குகிறது," என்றார்.

**பரையம்பட்டில் உழவர் பெருவிழா**

அவலூர்பேட்டை:மேல்மலையனூர் ஒன்றியத்தில் உழவர் பெருவிழா நடந்தது.வடுகப்பூண்டி, பரையம்பட்டு, சொக்கனந்தல் கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கினார். தானிய உற்பத்தி மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரித்திட அரசு வழங்கும் 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் , 50 சதவீதத்தில் பவர் கோனாவீடர், தக்கை பூண்டு விதை பயிர் பாதுகாப்பு மருந்துகள், களைக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும் என அதிகாரிகள் ஆலோசனை வழங்கினர். இதில் ஊராட்சி மன்ற தலைவர்கள் , வேளாண் துறை அதிகாரிகள் , கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர். துணை வேளாண் அலுவலர் சாந்தலட்சுமி நன்றி கூறினார்.

**மத்திய அரசு நிதி வழங்கிடவிவசாயிகள் கோரிக்கை**

விழுப்புரம்:தமிழகத்திற்கு வறட்சி நிவாரண பணிக்கு உரிய நிதியினை மத்திய அரசு வழங்க வேண்டுமென விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.விழுப்புரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட அமைப்புக்குழு கூட்டம் நடந்தது. கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் சரவணன் முன்னிலை வகித்தார். அமைப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் கலியமூர்த்தி வறட்சி குறித்து அறிக்கை வாசித்தார்.இதில், வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள பகுதியில் குடி தண்ணீர் பற்றாக்குறை போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சி நிவாரண பணிக்காக, தமிழக அரசு கோரும் நிதியினை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.இதில் இந்திய கம்யூ., மாநிலக்குழு உறுப்பினர் சந்திரசேகர் ஆசாத், விவசாய சங்க அமைப்புக்குழு உறுப்பினர்கள் குப்புசாமி, ராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கிளியூர் ஊராட்சியில் உழவர் பெரு விழா**

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை ஒன்றியம் கிளியூர் ஊராட்சியில் உழவர் பெரு விழா நடந்தது.குமரகுரு எம்.எல்.ஏ., தலைமை தாங்கி விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள், மரவள்ளி அறுக்கும் இயந்திரம், விதைகளை வழங்கி பேசினார். ஒன்றிய கவுன்சிலர் கணேசன் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி, விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், தோட்டக்கலைத் துறை மாயவன், ஒன்றிய சேர்மன் பாலு, ஒன்றிய செயலாளர் பழனிவேல், கூட்டுறவு சங்க துணை தலைவர் சுபாஷ், அமைப்பு சாரா ஓட்டுனரணி ஒன்றிய செய லாளர் அய்யனார், ஊராட்சி செயலர் ஆறுமுகம், இள ஞர் பாசறை செயலாளர் குணசேகரன், பாசறை துணை செயலாளர் சண்முகம், கிளை கழக துணை செயலாளர் கிளியானந்தம், மேலவை பிரதிநிதிகள் கோவிந்தன், கணேசன், கிளை கழக பொருளா ளர் சீனிவாசன், செயற்குழு உறுப்பினர் ஏழுமலை, நிர்வாகிகள் குப்பன்,

பாலா, திருவேங்கடம், முத்து, விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.முன்னாள் ஊராட்சி தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.

**திடீர் தீ விபத்தில்2 ஏக்கர் கரும்பு சேதம்**

சங்கராபுரம்:தீ விபத்தில் 2 ஏக்கர் கரும்பு தீயில் கருகி சேதமடைந்தது.சங்கராபுரம் அடுத்த பிர்மகுண்டம் கிராமத்தை சேர்ந்தவர் மொட்டையன் மகன் மணி. விவசாயி. நேற்று முன்தினம் இவருக்கு சொந்தமான கரும்பு தோட்டம் திடீரென தீப்பிடித்து எரியத் துவங்கியது. தீயணைப்பு அலுவலர் உசேன் ஷரிப் தலைமையில் வீரர்கள் சென்று தீயை அணைத்தனர். தீ விபத்தில் 2 ஏக்கர் கரும்பு கருகி சேதமடைந்தது.

**வறட்சியில் இருந்து மரங்களை பாதுகாக்க தேங்காய் நார் கழிவு**

தம்மம்பட்டி: தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, கொண்டையம்பள்ளி, நாகியம்பட்டி, வாழக்கோம்பை, நாரைக்கிணறு, நரிப்பாடி, மண்மலை பாலக்காடு உள்ளிட்ட பகுதிகளில், பாக்கு, தென்னை, வாழை மரங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.
பருவமழை பொய்த்ததாலும், கோடை தாக்கத்தாலும், தம்மம்பட்டி சுற்றுவட்டாரத்தில், நிலத்தடி நீர்மட்டம், அதள பாதாளத்துக்கு சென்றுவிட்டது. அதனால், போதிய தண்ணீர் இல்லாமல், பாக்கு, தென்னை, வாழை தோப்புகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரம், பெரிதும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
இந்நிலையில், கிணறுகளில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை கொண்டு, நீரின்றி காய்ந்து வரும் பாக்கு, தென்னை, வாழை மரங்களை காப்பாற்ற, தோப்பு முழுவதும், தென்னை நார் கழிவுகளை பரப்பி, அதில் சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.
தம்மம்பட்டி பகுதி விவசாயிகள் கூறியதாவது:
தேங்காய்நார் கழிவுகளை, தேவையான அளவுக்கு தோப்புகளில் பரப்பி, ஸ்பிரிங்கலர் வைத்து, சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். இதன் மூலம், மூன்று மணி நேரத்துக்கு தண்ணீர் பாய்ச்சினால், பத்து நாட்களுக்கு தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை. தேவையான அளவுக்கு ஈரப்பதம் இருக்கும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பருத்தி ஆடைகள் பயன்பாட்டை வலியுறுத்தி வேளாண் துறையினர் விழிப்புணர்வு பேரணி**

ஓசூர்: ஓசூர் அருகே சாமனப்பள்ளியில் இளநீர், சீயக்காய், பருத்தி ஆடைகள் பயன்பாட்டை வலியுறுத்தி வேளாண் துறையினர் விழிப்புணர்வு பேரணி சென்றனர்.
சூளகிரி அருகே சாமனப்பள்ளி பஞ்சாயத்து வேளாண் துறை சார்பில் பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் மகத்துவம் மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கு

நடந்தது.
பஞ்சாயத்து தலைவர் அஸ்மாபீ தலைமை வகித்தார். சூளகிரி வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பைய்யா வரவேற்றார். பேரணியில், வேளாண் ஊழியர்கள், செயற்கை குளிர்பானங்களை விட இயற்கை இளநீர் சிறந்தது, குடல் உபாதைகளினால் அவதிப்படும் குழந்தைகளுக்கு இளநீர் சிறந்த மருந்து, மனிதனின் வளர்ச்சியை ஊக்குவிக்க கூடிய வளர்ச்சி ஊக்கியாக இளநீர் செயல்படுகிறது, உடலை குளிர்ச்சியாக வைத்திட இளநீர் அருந்துவது நல்லது என பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்தனர்.
மேலும், இளநீர் குறித்த விழிப்புண்வு துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்து சென்றனர். அதன்பின் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கில் இளநீர், பருத்து ஆடைகள் பயன்பாடு குறித்து வேளாண் அலுவலர்கள் பாலசுப்பிரமணியம், தேவராஜ், திருமுருகுன் ஆகியோர் செயல்விளக்கம் செய்து காட்டினர்.
தோட்டக்கலை உதவி இயக்குனர் காளியப்பன், வேளாண்மை அலுவலர் ரமண கீதா, உதவி வேளாண்மை அலுவலர் பெருமாள், வேளாண் பொறியியல் துறை, பட்டு வளர்ச்சி துறை, மீன் வளர்ச்சி துறை, விதைச்சான்று, உள்ளிட்ட துறை அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை அட்மா தெழில்நுட்ப மேலாளர் பார்த்தீபன், தொழில்நுட்ப வல்லுர்கள் தென்றல், கவுதம் ஆகியோர் செய்திருந்தனர்.

**மலர் கண்காட்சியில் 20 ஆயிரம் பேருக்கு இலவச "டீ' : தரமான தேயிலை குறித்து விழிப்புணர்வு**

ஊட்டி:ஊட்டி மலர் கண்காட்சியில், தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் (டான் டீ) சார்பில், 20 ஆயிரம் பார்வையாளர்களுக்கு இலவசமாக "டீ' வழங்கப்பட்டது.குன்னூரை தலைமையிடமாக கொண்டு செயல்படும், "டான் டீ' நிறுவனம் சார்பில், நீலகிரி, வால்பாறையில் 8 தேயிலை தொழிற்சாலைகள், பல 1,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை தோட்டங்கள் உள்ளன. உயர் ரக ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் உற்பத்திக்கு பெயர் போன "டான் டீ'யில், சி.டி.சி., ரக தேயிலை தூளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.சிறப்பு தூள் தயாரிப்புஇந்நிலையில், டான் டீ மூலம், மருத்துவ குணம் நிறைந்த ஒயிட் டீ, கிரீன் டீ, டிப் டீ போன்ற, சிறப்பு தேயிலை தூள் உற்பத்தியும் சில மாதங்களாக செய்யப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று நாட்களாக ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடந்த மலர் கண்காட்சியில், "டான் டீ' மண்டல மேலாளர் இக்னேஷியஸ்
(விற்பனை, மார்க்கெட்டிங்) மேற்பார்வையில், "டான் டீ' சார்பில் அமைக்கப்பட்டிருந்த காட்சி

அரங்கில், "டான் டீ' ஆர்தோடக்ஸ், சி.டி.சி., கிரீன், ஒயிட் டீ, டிப் டீ போன்றவை விற்பனை செய்யப்பட்டன. கலப்படமற்ற, நல்ல தேயிலை தூளில் கலந்துள்ள மருத்துவ குணத்தை, பார்வையார்கள் உணர்ந்து கொள்ளும் வகையில், 20 ஆயிரம் பேருக்கு, இலவசமாக "நீலகிரி டீ' வழங்கப்பட்டு, நீலகிரி டீயின் சுவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.திட்டங்கள் தயார்"டான் டீ' நிர்வாக இயக்குனர் பாலாஜி கூறுகையில், ""மக்களுக்கு கலப்படமற்ற, தரமான தேயிலை தூளை வழங்க வேண்டும், என்ற நோக்கில், "டான் டீ' மூலம், சிறப்பு தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாநிலத்தின் பல இடங்களில், "டான் டீ' தயாரிப்புகளை விற்க மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். வாய்ப்புள்ள இடங்களில், "டான் டீ' விற்பனை அரங்குகளை அமைக்கவும் திட்டமிட்டு வருகிறோம். கோத்தகிரி குயின்சோலை தொழிற்சாலையில்,"கிரீன் டீ', குன்னூர் தொழிற்சாலையில் "ஆர்கானிக் டீ' தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளோம்," என்றார்."டான்டீ' சார்பில்...டு தரமான தேயிலை தூளை வழங்க வேண்டும் என்ற நோக்கில் சிறப்பு தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. "கிரீன்டீ', "ஆர்கானிக் டீ' தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கோத்தகிரியில் மழைவிவசாயிகள் ஆறுதல்**

கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய்துள்ளதால், விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர். கோத்தகிரியில் நேற்று முன்தினம் இரவு, சுமார் ஒரு மணி நேரம் இடியுடன் கூடிய ஓரளவு மழை சுற்றுவட்டார பகுதிகளில் பெய்தது. கோத்தகிரியில் 11 மி.மீட்டரும், கோடநாட்டில் 17 மி. மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. இதனால், விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர்.வறண்டு கிடந்துள்ள நிலம் ஈரம் கொள்வதற்கு, தொடர் மழை தேவை என்பதால், கிராமப்புற விவசாயிகள் வருண பகவானை வேண்டி, சிறப்பு பூஜைகள் நடத்தி வருகின்றனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கூட்டம்**

பெரம்பலூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும், 23ம் தேதி நடக்கிறது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது, தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும், 23ம் தேதி காலை, 10.30 மணிக்கு, பெரம்பலூர் கலெக்டர் கூட்ட மன்றத்தில் நடக்கிறது.

இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள்

மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**வறட்சி நிவாரண குளறுபடி விவசாயிகள் ரோடு மறியல்**

வடமதுரை:எரியோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம், வறட்சி பாதிப்பு விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் பணி துவங்கியது. இதில் சிறு விவசாயிகள் சேர்க்கப்படவில்லை. கணக்கெடுப்பில் குளறுபடி நடந்துள்ளது. இதனை முறைப்படுத்த, மறுபடியும் புதிதாக கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் எரியோடுநால் ரோடு சந்திப்பில் ரோடு மறியல் செய்தனர். தாசில்தார் மாரியம்மாள் தலைமையில் அதிகாரிகள், சங்க ஒன்றிய செயலாளர் பாலுபாரதி, மாவட்ட துணை செயலாளர் துரைக்கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். விடுபட்ட விவசாயிகள் பட்டியல் பெற்று, மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி உதவித்தொகை பெற நடவடிக்கை எடுப்பது என முடிவானது. இதனையடுத்து நான்கு நாட்களுக்கு போராட்டத்தை ஒத்தி வைப்பதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**வறட்சி நிவாரணம் வழங்க கோரி விவசாயிகள் முற்றுகை போராட்டம்**

பழநி:பழநி அருகே அமரப்பூண்டியில், தமிழக அரசின் வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தியும், கணக்கெடுக்காத தலையாரியை கண்டித்து, வி.ஏ.ஓ., அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர்.பழநி ஆயக்குடி பேரூராட்சிøக்கு உட்பட அமரப்பூண்டி கிராமத்தில் 1,800க்கும் மேற்பட்ட விவசாயிகள், நெல், தட்டான்பயறு, மக்காசோளம் போன்றவற்றை பயிரிட்டு, கடும் வறட்சிக்காரணமாக தங்கள் முதலீட்டை இழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து அக்கிராம வி.ஏ.ஓ., தலையாரி மூலம் கணக்கெடுப்பு நடந்தது. இதில் 1158 விவசாயிகள் கண்டறியப்பட்டு 65 லட்ச ரூபாய் வரை வறட்சி நிவாரணம்அமரப்பூண்டிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முற்றுகை: அமரப்பூண்டியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள், தங்களது நிலங்களை தலையாரி,வி.ஏ.ஓ., மற்றும் அதிகாரிகள் பார்வையிட வரவில்லை. அவர்களாகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியல் தயார் செய்துள்ளனர். பல சர்வே எண்ணில் நிலம் வைத்துள்ள ஒருத்தருக்கு வறட்சிநிவாரணம் வழங்குகின்றனர். கிழகோட்டையைச் சேர்ந்த தங்கள் பகுதியை கணக்கிடவில்லை. எங்களுக்கு வறட்சி நிவாரணத்தொகை வழங்க வேண்டும். தலையாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என வலிறுத்தி வி.ஏ.ஓ. அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். தாசில்தார் இதயத்துல்லாகான் கூறுகையில்,""வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும், நிவாரணத்தொகை வழங்கப்படும். முறைப்படி வி.ஏ.ஓ.விடம் மனு கொடுக்க வேண்டும். மாவட்ட கலெக்டரிடம் பரிந்துரை செய்து நிவாரணத்தொகை வழங்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார்.

**பாறைகள் வெடி வைத்து தகர்ப்பு விவசாய நிலங்களில் பாதிப்பு**

போடி:போடி அருகே குரங்கணி மலைப்பகுதியில், அனுமதியின்றி பாறைகளை வெடி வைத்து உடைத்து, கட்டடங்கள் கட்டி வருவதால், விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு நீரோட்ட பாதைகள் திசைமாறுகின்றன. நறுமண சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள குரங்கணி- டாப்ஸ்டேஷன் செல்லும் பகுதியில், இயற்கை எழில் கொஞ்சும் நீர் வீழ்ச்சிகள், கண் கவரும் பாக்குமரங்கள், வன விலங்குகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள ஆறு மற்றும் விவசாய நிலங்களையொட்டி உள்ள பாறைகளை அப்பகுதியை சேர்ந்தவர்கள் வெடி வைத்து தகர்த்து கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்துகின்றனர். பாறைகளை உடைக்கும் சத்தம் கேட்டு, வனவிலங்குகள் இடம் பெயர்வதோடு, விவசாய நிலங்களும் பாதிப்படைகின்றன. ஆற்றுப்பகுதியில் உள்ள பாறைகØளை தகர்ப்பதால், நீர் வரும் பாதையின் திசை மாறி மழைக்காலங்களில் விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது. இதனால் சில நேரங்களில், அப்பகுதியில் செல்லும் விவசாயிகள் மீது கற்கள் விழுந்து காயம் ஏற்படுத்துகிறது. விபத்துகளை தவிர்க்க, மலைப்பகுதியில் பாறைகளை உடைப்பதை தடுக்க வனத்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயம் செய்யாத நிலங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் "விவசாயம் செய்யாத நிலங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்' என, புல்லங்குடி மற்றும் உப்பூர் பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலெக்டர் நந்தகுமாரிடம் கோரிக்கை மனு அளித்தனர். புல்லங்குடி ஊர் தலைவர் முனியாண்டி கூறியதாவது: எங்கள் ஊராட்சிக்குட்பட்ட நான்கு கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அதிகாரிகள் ஆய்வு குழு பார்வையிட வந்தபோது, பயிர்கள் நன்றாக இருந்தது. அதன்பின், தண்ணீரின்றி சாவியாகிப்போனது. இதனால், இப்பகுதி விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்தனர். எனவே, பாதிக்கப்பட்ட எங்களுக்கும் அரசு நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.ராமநாதபுரம் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர், பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது:வைகை பாசன பழைய ஆயக்கட்டு பகுதியிலுள்ள கண்மாய்கள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகின்றன. விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாய குடும்பங்கள் வறுமையில் உள்ளன. எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பற்ற, விவசாயம் செய்யாத நிலங்களுக்கும் அரசு வறட்சி நிவாரணத் தொகை வழங்க முன்வரவேண்டும், என்றார்.

**வறட்சி நிவாரணம் பெறுவதில் விவசாயிகளுக்கு... சிக்கல் கிராமம் வாரியாக பெயர் பட்டியல் ஒட்ட வேண்டும்**

சாயல்குடி:கடலாடி பகுதியில் வறட்சி நிவாரணம் வழங்குவதில், கிராமங்கள் வாரியாக பெயர் பலகை ஒட்டாமலிருப்பதால், தங்களது பெயர் தெரியாமல் விவசாயிகள் அலைக்கழிப்பு செய்யப்படுகின்றனர்.கடலாடி பகுதியில் வறட்சி நிவாரணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் ஏக்கருக்கு ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களது இடத்திற்கான கம்ப்யூட்டர் (10) 1 அடங்கள், இரண்டு போட்டோக்களை கொடுத்து நிவாரணத்தொகையை பெற வேண்டும். இந்நிலையில், கடன் சங்கத்திற்குட்பட்ட கிராமங்களின் பட்டாதாரர்களின் பெயர், தன் கிராமத்தின் வரிசையில் இல்லாமல், வேறொரு கிராமத்தில் மாறி இடம் பெற்றுள்ளன. விவசாயிகள் தங்களது பெயரை தேடி பிடிப்பதற்குள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். படிக்க தெரியாத பெண்கள், முதியோர் அவர்களது பெயரை கண்டுபிடிக்க சிரமப்படுகின்றனர். இதனால் இவர்களது நிவாரணத்தொகைகளில் முறைகேடு நடக்கும் நிலை உள்ளது. இதை தவிர்க்க, கிராமம் வாரியாக பயனாளிகளின் பெயர், அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும். வாகைக்குளம் வீரன்: பிள்ளையார்குளம் கடன் சங்கத்தில் ஏழு ஊராட்சியை சேர்ந்தவர்களின் பெயர்களும் கிராமங்கள் வாரியாக இல்லாமல், மாறி, மாறி ஒட்டு மொத்தமாக பெரிய நோட்டாக உள்ளது. இதில், படித்தவர்களே தேடி பிடிக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். படிக்கத் தெரியாதவர்கள் எப்படி பார்க்க முடியும்? இதனால், கிராமங்கள் வாரியாக பட்டாதாரர்களின் பெயர் பட்டியல் ஒட்டவேண்டும். பீல்டு மேலாளர் முருகன்: வரிசை படுத்துவது வருவாய் துறையின் பணி. இதில் எங்கள் தலையீடு இருக்கக்கூடாது. பட்டியல் உள்ளபடி வழங்க வேண்டும், என கூட்டுறவு இணைப்பதிவாளர் உத்தரவிட்டுள்ளார். கடலாடி தாசில்தார் அமிர்தம் கூறியதாவது: கூட்டத்தை குறைப்பதற்காக ஒரு நாளைக்கு ஒரு கிராமத்திற்கு வழங்கப்படும். அக்கிராமத்தின் பெயரும் வெளியில் ஒட்ட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் குழப்பம் இருக்காது, என்றார்.

**உழவர் பெரு விழா**

காரியாபட்டி:காரியாபட்டி வெற்றிலைமுருகன்பட்டி, என்.நெடுங்குளம், ஏ.தொட்டியங்குளம் மற்றும் கம்பாளி, துலுக்கன்குளம், கீழஇடையன்குளம் கிராமங்களில், உழவர் பெருவிழா மற்றும் உழவர் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் செண்பகராமன் துவக்கி வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சரஸ்வதி இளநீர், பருத்தி, சிறுதானியங்கள், சீகைக்காய் உள்ளிட்ட பாரம்பரிய பொருட்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார். ஊராட்சித் தலைவர்கள் வாசுதேவன், பரமேஸ்வரி,கற்பகவள்ளி, சின்னப்பிள்ளை துணைத்தலைவர் முருகன் பேசினர். வேளாண்மை அலுவலர்கள் செல்வராஜ், மாரியப்பன், புஷ்பவள்ளி, கனகராஜ், சேகர், மீனா, சாந்தி, உமாமகேஷ்வரி, அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துக்கருப்பன், தொழில் நுட்ப வல்லுனர்கள் சேது, சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.சிவகாசி:

வெம்பக்கோட்டை வட்டாரம், வால்சாபுரத்தில் உழவர் பெரு விழா நடந்தது. சிப்பிப்பாறை ஊராட்சி துணை த்தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் வனஜா வரவேற்றா. விருதுநகர் வேளாண் இணை இயக்குனர் சுப்பையா, ஒன்றிய கவுன்சிலர் ஜெயராஜ், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் சுபாராஜ் பேசினர். ஸ்ரீவில்லிபுத்தூர்: மேலத்தொட்டியபட்டியில் உழவர் பெருவிழா நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சுப்பையா முன்னிலை வகித்தார். ஸ்ரீவி., வேளாண் உதவி இயக்குனர் டாக்டர் ஆறுமுகம் வரவேற்றார். பிள்ளையார்நத்தம் ஊராட்சி தலைவர் ராமலட்சுமி தலைமை வகித்தார். பருத்தி ரகங்கள் பற்றி உதவி பேராசிரியர் ஞானசேகரன் பேசினார். வேளாண் வணிகம் பற்றி வேளாண் இணை இயக்குனர் முத்து முனியாண்டி , இணை இயக்குனர் செண்பக ராஜ் பேசினார். வங்கி கடன் குறித்து பூவாணி கூட்டுறவு வங்கி செயலாளர் தேவராஜ் பேசினார்.

**வறட்சியால் நீர் ஆதாரங்கள் பாதிப்பு நிதி எதிர்பார்ப்பில் ஊராட்சிகள்**

சிவகாசி:கடும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்ட நிலையில்,தண்ணீர் சப்ளைக்கான வறட்சி நிவாரண நிதியை, எதிர்பார்க்கும் நிலையில் ஊராட்சிகள் உள்ளன. சிவகாசி பெரும்பகுதி வறட்சி பகுதியாகவே உள்ளது. இப் பகுதியில் 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், விவசாயத்தை கைவிட்டு, பட்டாசு ஆலைகளுக்கு கூலி தொழிலாளர்களாக செல்கின்றனர். விவசாயம் சரிவர நடக்காததால், கால்நடைகளுக்கு தீவனங்களும் தட்டுப்பாடு நிலவுகிறது. கடும் வறட்சியால், ஊராட்சிகளில் குடிநீர் மற்றும் உப்பு நீர் கூட வினியோகிக்க முடியாதநிலை உள்ளது. 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்படுகிறது. கோடை துவங்குவதற்கு முன்பே, ஊராட்சி நிதியினை வேறு பணிகளுக்கு செலவிட கூடாது. குடிநீர் பிரச்னைக்கு மட்டும் செலவிட வேண்டும் என, மாவட்ட நிர்வாகம்ஆலோசனை வழங்கியது. ஆனால் ஊராட்சிகளில், புதிய நீர் ஆதாரங்கள் அமைத்து,பராமரிப்பு செய்யும் அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லை. கிராமத்தில் நிலவும் தண்ணீர் பிரச்னையை தீர்க்க, மினிபவர் பம்பு அமைப்பதற்கு குறைந்தபட்சம் 1.50 லட்சம் ரூபாய் செலவிட வேண்டும். கிணறு ஆழப்படுத்துதல், போர் அமைக்க வேண்டும் என நினைத்தால், குறைந்த பட்சம் 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை செலவிட வேண்டியுள்ளது. ஆனால் ஊராட்சிகளில் அந்தளவிற்கு நிதி ஆதாரம் இல்லை. கிராமத்தில் தண்ணீர் பிரச்னை எழுந்தவுடன், ஊராட்சி தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஒன்றிய அதிகாரிகளிடம் முறையிடுகின்றனர்.ஒன்றிய அதிகாரிகளோ, ஊராட்சி நிதி இருந்தால் செலவிடுங்கள், இன்னும் வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு ஏதும் வரவில்லை. நிதி வந்தால், உங்கள் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுப்போம் என கூறி, சமாளித்து அனுப்புகின்றனர். ஊராட்சி தலைவர்களும் அதிகாரிகள் சொல்வதை கேட்டு, அமைதியாக திரும்புகின்றனர்.ஒவ்வொரு ஒன்றியத்திலும்

வறட்சியை சமாளிக்க, 10 கோடி முதல் 20 கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பீடுகள் தயார் செய்து, மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் கோடை முடியும் தருவாயில் கூட, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வறட்சிநிவாரண நிதி ஒதுக்கீடு ஏதும் வரவில்லை. ஒன்றியத்தில் 54 ஊராட்சிகளில் முதல்நிலை ஊராட்சிகளில்தான் பணம் செலவு செய்யும் அளவிற்கு, ஓரளவிற்கு நிதி ஆதாரம் உள்ளது. மற்ற ஊராட்சிகளில் லட்சக்கணக்கில் செலவு செய்யும் அளவிற்கு நிதி ஆதாரம் இல்லை. பல கிராமங்களில் உப்பு தண்ணீர் வினியோகிக்க கூட வழியில்லை. ஊராட்சிகளில் நிலவும் வறட்சியை போக்க, மாவட்டத்தில் இருந்து வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என, ஊராட்சி தலைவர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

**விவசாயிகளிடம் மனுக்களை சேகரித்த இந்திய கம்யூனிஸ்ட்**

வத்திராயிருப்பு:வறட்சியால் பாதிப்பிற்குள்ளான விவசாயிகளிடம், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் மனுக்கள் சேகரித்து, கலக்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. கோடைகால நடவுப்பணிகளை மேற்கொண்ட நெல் விவசாயிகள் பெரும்பாலானோர், வறட்சியால் மகசூலை இழக்க நேரிட்டது. கிணற்றுப்பாசன விவசாயிகளால் மட்டுமே விவசாயத்தை தொடர முடிந்தது. அவர்களும் கடும் மின்தடை காரணமாக பம்புசெட்டுகளை இயக்க முடியாமல், நீர்பாய்ச்ச முடியாமல், படிப்படியாக மகசூலை இழந்தனர். இப்படி பல்வேறு காரணங்களால் மகசூலை இழந்த விவசாயிகள், நிவாரண உதவி கோரியும்,அவர்களது மனுக்கள் பரிசீலனை செய்யப்படவில்லை. சமீபத்தில் தமிழகம் வந்த மத்திய குழுவினர், ஒருசில பகுதிகளை மட்டும் பார்வையிட்டு சென்றனர். கணக்கில் சேர்க்கப்படாத பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மனுக்கள் சேகரித்தனர். இதற்காக வத்திராயிருப்பில் முகாம் நடத்தினர். மாவட்ட செயலாளர் ராமசாமி துவக்கினார். பொன்னுப்பாண்டியன் எம்.எல்.ஏ., தென்காசி எம்.பி., லிங்கம் ஆகியோர், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் மனுக்களை பெற்றனர். மனுக்களை கலக்டர் ஹரிஹரனிடம் ஒப்படைத்தனர். நகர செயலாளர் கோவிந்தன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ராமதாஸ், முருகேசன் உடன் சென்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.05.2013 A.M**

---

## மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத் து விநாடிக்கு ஆயிரம் கனஅடியை தாண்டி உள்ளது. விவசாயிகள் மகிழ்ச் சியடைந்துள்ளனர். நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக 500 கனஅடிக்கும் குறைவாகவே நீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், வினாடிக்கு 448 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 1,050 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 34 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 700 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 9.23 டி.எம்.சி.

## தேயிலை தூள் விலை சரிவு

குன்னூர் : குன்னூர் சி.டி.டி.ஏ.ஏலமையத்தில் 3வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி நாட்களில் நடந்தது. மொத்தம் 16லட்சத்து 97ஆயிரத்து 905 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில் பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்கவில்லை. உள்நாட்டு வர்த்தகர்கள் பங்கேற்று தரமான தேயிலை தூளை கொள்முதல் செய்தனர். அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ.3 வரை விலை சரிந்தது.

ஏலத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.88 முதல் ரூ.93 வரையிலும், உயர்வகை ரூ.120 முதல் ரூ.130 வரையிலும், டஸ்ட ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.86 முதல் ரூ.90 வரையிலும், உயர்வகை ரூ.150 முதல் ரூ.160 வரையிலும் விலை கிடைத்தது.

## தக்காளி விலை உயர்வு

மதுரை, : மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து குறைவால் தக்காளி விலை கிலோ ரூ.40ஆக உயர்ந்துள்ளது.

காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம் (கிலோ&ரூபாய் மதிப்பில்): நாட்டுத்தக்காளி 40, கத்தரிக்காய் 25, வெண்டைக்காய் 15, பல்லாரி 16, சின்னவெங்காயம் 60, உருளை 25, கருணை 40, சேனை 30, சேப்பக்கிழங்கு 40, காரட் 50, பீட்ரூட் 30, பட்டர்பீன்ஸ் 80, சோயாபீன்ஸ் 70, பச்சை பட்டாணி 160, முருங்கை பீன்ஸ் 45, நூக்கல் 40, முள்ளங்கி 40, அவரை 50, மிளகாய் 50, சுரைக்காய் 20, சவ்சவ் 35, சீனி அவரைக்காய் 20, வெள்ளைபூசணி 10, சர்க்கரை

பூசணி 10, கருவேப்பிலை 30, கொத்தமல்லி 120, புதினா 20, காலிபிளவர் 30, பீர்க்கங்காய் 30, முட்டைக்கோஸ் 15, புடலங்காய் 25, பெரிய பாகற்காய் 35, இஞ்சி 180, கீரை வகைகள் 15. காய்கறி மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில் 'மழையின்மை, வறட்சி காரணமாக பெரும்பாலான காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. குறிப்பாக தேனி மாவட்டத்தில் இருந்து தக்காளி வரத்து பெருமளவு குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது' என்றார்.

**தேங்காய் உரிக்கும் தொழிலாளருக்கு கூலி உயர்வு வழங்க விவசாயிகள் உறுதி**

உடுமலை,: பருவமழை பெய்து நிலைமை சீரானதும் தேங்காய் பறிக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு தருவதாக விவசாயிகள் உறுதியளித்தனர்.இதனால், தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

உடுமலை அருகே ஜல்லிபட்டி, பள்ளபாளையத்தில் விவசாயிகள்அதிகளவில் கொப்பரை உற்பத்தி செய்கின்றனர். இங்குள்ள உற்பத்தி கலங்களில் நூற்றுக்கணக்கான தேங்காய் உரிக்கும் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவர்களுக்கு ஒரு தேங்காய் உரிக்க 30 பைசா கூலியாக வழங்கப்படுகிறது.

ஆனால், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், தேவனூர்புதூர் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு 40 பைசா வழங்கப்படுகிறது.அதேபோல் தங்களு க்கும் கூலி உயர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி தொழிலாளர்கள் கடந்த ஒரு வாரமாக ஸ்டிரைக்கில் ஈடுபட்டனர். இதனால் கொப்பரை கலங்களுக்கு தேங்காய் வரத்து பாதிக்கப்பட்டது. இதுபற்றி தாசில்தாரிடம் விவசாயிகள் முறையிட்டனர். இதையடுத்து, உடுமலை தாலுகா அலுவலகத் தில் தாசில்தார் சைபுதீன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது.இதில் விவசாயிகள் சங்க நிர்வாகி கள் செல்வராஜ், பஞ்சலிங்கம், சுப்பிரமணி யம் மற்றும் தொழிலாளர்கள் தரப்பில் சிலரும் பங்கேற்றனர். விலைவாசி உயர்வால் கூலி உயர்வு தரும்படி தொழிலாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுத்தனர். ஆனால், கடும் வறட்சி நிலவுவதால் தென்னைகள் கருகி கொப்பரை உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. பருவமழை பெய்து நிலை மை சீரானதும் கூலி உயர்வு வழங்க தயாராக உள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவித்தனர்.

இதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு ஸ்டிரை க்கை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர். நேற்று முதல் தேங்காய் உரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

**நெல்லை மாவட்டத்தில் அரசு மானியத்தில் 1090 ஹெக்டேரில் சொட்டு நீர் பாசனம் கலெக்டர் தகவல்**

நெல்லை, : நெல்லை மாவட்டத்தில் அரசு மானியத்தில் 1090 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:

நெல்லை மாவட¢டத்தில் கிணறுகளில் நீர் இருப்பு குறைந்து வரும் நிலையில் பாசன நீரை

சிக்கனமாக பயன்படுத்தி, அத¤க பரப்பளவில் தோட்டக் கலை பயிர்கள் சாகுபடி செய்து உற்பத்தியை பெருக்க சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க தமிழக அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க கடந்த ஆண்டு மானியமாக சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக 100 சதவீதம் மானியத்தில் ரூ.43,816 அரசு வழங்கியது. தற்போது நடப்பு ஆண்டில் சொட்டு நீர் பாசனம் அமைக்க தமிழக அரசு கூடுதலாக மானியம் அறிவித்துள்ளது.

அதாவது காய்கறி பயிர் சாகுபடி செய்ய சிறு விவசாயிகளுக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேருக்கு 100 சதவீதம் மானியமாக ரூ.ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 565 அரசால் வழங்கப்பட உள்ளது.

நெல்லை மாவட¢டத்திற்கு நுண் நீர் பாசன திட்டத்தில் 1090 ஹெக்டேர் பரப்பிற்கு மானியம் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 872 ஹெக்டேர் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திலும், 218 ஹெக்டேர் பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும் வழங்கப்படுகிறது.

பெரிய விவசாயிகளுக்கு அதிகபட்சம் 5 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும். சிறு விவசாயி 2 ஹெக்டேர் பரப்பில் பயிர் சாகுபடி செய்தால் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க காய்கறி பயிருக்கு ரூ.ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 656ம், வாழை பயிருக்கு ரூ.ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 441ம், மா அடர் நடவு பயிருக்கு ரூ.51 ஆயிரத்து 438ம், தென்னை பயிருக்கு ரூ.32 ஆயிரத்து 323ம், எலுமிச்சை, நெல்லி பயிருக்கு ரூ.44 ஆயிரத்து 387ம் முழு மானியம் வழங்கப்படும்.

பாசனம் அமைக்கும் விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான அரசு அங்கீகாரம் பெற்றுள்ள 22 சொட்டு நீர் நிறுவனங்களில் எதை வேண்டுமானாலும் தேர்வு செய்து கொள்ளலாம். பாசனம் அமைக்கும் விவசாயிகள் மானியம் பெற விண்ணப்பத்தை 10 (1) அடங்கல், ச¤று குறு விவசாயி சான்றிதழ், குடும்ப அட்டை, கம்ப்யூட்டர் பட்டா, நில வரைபடம், நிறுவனத்தின் மத¤ப்பீட்டுடன் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர், தோட்டக் கலை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலரை அணுகி விண்ணப்பத்தை முன் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**கடலை எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட சேலம் வேளாண் கூட்டுறவு சங்கம் முடிவு**

சேலம், :சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கடலை எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட முடிவு செய்துள்ளது.

சேலம் பள்ளப்பட்டியில் உள்ள சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் நிலக்கடலை, பருத்தி, நெல், மிளகாய், மஞ்சள் உள்ளிட்ட விளை பொருட்களை பெற்று, ஏலம் மூலம் விற்பனை செய்து வருகிறது. இதன் வர்த்தகத்தை பெருக்கும் நோக்கில் மேலும் புதிய தொழில்களை தொடங்க திட்டமிட்டுள்ளது.

எண்ணெய் பிழிந்து எடுக்க எக்ஸ்பெல்லர் இயந்திரத்தை நிறுவுவதன் மூலம் சீசன் காலங்களில்

தினமும் 3 டன் எண்ணெய் பிழிந்து எடுக்க முடியும் என்கிறார் இச்சங்க தனி அலுவலர் முத்துராஜ். இது குறித்து அவர் கூறியதாவது:
தற்போது வெளிசந்தைகளில் விற்கப்படும் முன்னணி பிராண்டு கடலை எண்ணெயில் பெரும்பாலும் பாமாயிலும் கலந்தே விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலை கிலோ `140 ஆக உள்ள நிலையில், கூட்டுறவு சங்கமே உற்பத்தி செய்யும்பட்சத்தில், தரமான ஒரு கிலோ கடலை எண்ணெய் `121க்கு நுகர்வோருக்கு விற்க முடியும்.
சேலம் மாவட்டத்தில் நிலக்கடலை, எள், தேங்காய் ஆகிய விளை பொருட்கள் அதிகம் விளைவிக்கப்படுகிறது. அவற்றை தனியார் கொள்முதல் செய்து, எண்ணெய்யாக மாற்றி அதிக விலைக்கு விற்பனை செய்வதால், விவசாயிகள், நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர்.
இதை கருத்தில்கொண்டு கூட்டுறவு சங்கத்தின் மூலம் நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் பிழியும் இயந்திரம் அமைத்து, எண்ணெய் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய்யை அனைத்து ரேஷன் கடைகளிலும் விற்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக, நடைமுறை மூலதனமாக நபார்டு வங்கியிடம் `2.50 கோடி கடன் உதவி கோரப்பட்டு உள்ளது.
இவ்வாறு முத்துராஜ் கூறினார்.

**சிறந்த தோட்டக்கலை விளைபொருளுக்கு பரிசு விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை அழைப்பு**

சேலம், : ஏற்காட்டில் நடைபெற உள்ள மலர்க்கண்காட்சியில், காட்சிக்கு வைக்கப்படும் சிறந்த விளை பொருளுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.
ஏற்காட்டில் நடைபெறவிருக்கும் 38வது மலர் கண்காட்சி மற்றும் காய்கறி, பழக்கண்காட்சி சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பழக்கண்காட்சி மற்றும் காய்கறி கண்காட்சியில் விவசாயிகள் தங்கள் வயலில் சாகுபடி செய்துள்ள தோட்டக்கலை விளை பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்களை வைக்க தோட்டக்கலைத்துறை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
போட்டியில் பங்கேற்க விரும்பும் சேலம் மாவட்ட விவசாயிகள் தங்களின் சிறந்த தோட்டக்கலை விளை பொருளை 30ம் தேதியன்று காலை 11 மணிக்குள் சேலம் தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்திலோ அல்லது ஏற்காடு மலர் கண்காட்சி திடலிலோ பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும்.
அப்பொருட்கள் 31ம் தேதியன்று கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். போட்டியில் வெற்றி பெற்ற சிறந்த தோட்டக்கலை காட்சி பொருட்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்களால் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு சேலம் செரி ரோட்டில் உள்ள தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்திலோ அல்லது அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களையோ

அணுகி விவரம் பெறலாம் என சேலம் தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

**உடன்குடி, மெஞ்ஞானபுரம் பகுதியில் தென்னை, பனைமரங்கள் கருகி அழியும் அபாயம்**

உடன்குடி, : உடன்குடி, மெஞ்ஞானபுரம் பகுதிகளில் கடும் வறட்சி காரண மாக பனை, தென்னை மரங்கள் கருகி விவசாயம் முற்றிலும் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. துீத்துக்குடி மாவட்டம் உடன்குடி, மெஞ்ஞானபுரம், பரமன்குறிச்சி, சாத்தான் குளம், நாசரேத் பகுதிகளில் பெரும்பாலானவர்கள் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் பயனடைந்து வந்தனர். பெரும்பான்மையானோர் பனைத்தொழில் மற்றும் தென்னை தொழி லில் ஈடுபட்டு வந்தனர். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சரிவர மழை பெய்யாததாலும், பருவமழை பொய்த்ததாலும் பெரும்பாலான விவசாய குடும்பத்தினர் ஊரை காலி செய்து நிலங்களை அடமானம் வைத்தோ, விற்பனை செய் தோ, குத்தகைக்கு விட்டோ வெளியிடங்களுக்கு பிழைப் பை தேடி சென்றனர்.

ஏற்கனவே உடன்குடி, மெஞ்ஞானபுரம் பகுதிகளில் நிரந்தர கால்வாய் இல்லாத காரணத்தினால் சில ஆண்டுகளாக குளங்களில் தண்ணீர் என்பதே இல்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளிலும் நீர் வற்ற ஆரம்பித்துள்ளது. பனைமரம் கடுமையான கோடையையும் தாக்கு பிடிக்கும் சக்தி வாய்ந்தது. அந்த பனைமரமே தற்போது பட்டுப் போய் வெறுமை யான கம்பமாக நின்று கொண்டு குருவிகளுக்கு தான் புகலிடமாக உள்ளது. மேலும் பெரும்பாலான தென்னை விவசாயிகளும் நிலத்தடிநீர் உப்பாக மாறிய தால் காய்களும் சரிவர காய்க்காமல் இருப்பதுடன் தென்னையின் குலைகள் கருகி வருகிறது. இதனால் விவசாயிகள் தங்களது நிலங்களை விற்பனை செய்து வருவதுடன் பெரும்பாலான விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு தற்போது பிளாட்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

எனவே அரசு நாட்டின் முதுகெலும்பான விவசாயத்தை அழிய விடாமல் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.05.2013 A.M

**நாமக்கல் மாவட்டத்தில் வருகிற 24, 25–ந் தேதிகளில் கறவைப்பசு, வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கான மருத்துவ முகாம்**

நாமக்கல்,

நாமக்கல் மாவட்டத்தில் வருகிற 24, 25–ந் தேதிகளில் கறவை பசுக்கள், ஆடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறுகிறது.

விலையில்லா ஆடுகள்

தமிழக முதல்–அமைச்சரால் 15.9.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 2½ லட்சம் பயனாளிகளுக்கு 10 லட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும் தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 24 ஆயிரம் பயனாளிகளுக்கு 24 ஆயிரம் கறவை பசுக்களும் 2011–2012 மற்றும் 2012–2013–ல் வழங்கப்பட்டு உள்ளது.

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்த வரை 2011–2012–ம் ஆண்டு 100 கறவை பசுக்களும் மற்றும் 11,624 ஆடுகளும் வழங்கப்பட்டு மாவட்டத்திற்கான குறியீடு முழுமையாக முடிக்கப்பட்டு உள்ளது. ஓராண்டு இலக்கு 5 மாதங்களிலேயே நிறைவேற்றப்பட்டது. 2012–2013–ம் ஆண்டில் 100 கறவை பசுக்களும் மற்றும் 3,574 பயனாளிகளுக்கு 14,296 ஆடுகளும் இந்த மாவட்டத்தில் வழங்கப்பட்டு மாவட்டத்திற்கான குறியீடு முழுமையாக முடிக்கப்பட்டு உள்ளது. இந்த பணி சிறப்பாக நடைபெற்று, 2011–2012 மற்றும் 2012–2013–ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஆடுகளில் 13,990 குட்டிகள் ஈன்றது கண்டறியப்பட்டு உள்ளது. இந்த குட்டிகளில் விற்பனை மூலம் பயனாளிகளின் பொருளாதார நிலை மேன்மை அடைந்துள்ளது.

மருத்துவ முகாம்

இந்த திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என முதல்–அமைச்சர் வலியுறுத்தி உள்ளார். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டு உள்ளன. இந்த திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி

திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 2011–2012–ம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட கறவை பசுக்கள், ஆடுகளுக்கு வருகிற 24–ந் தேதியும் மற்றும் 2012–2013–ம் ஆண்டு வழங்கப்பட்ட கறவை பசுக்கள், ஆடுகளுக்கு வருகிற 25–ந் தேதியும் இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. எனவே இந்த திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் ஜெகநாதன் கேட்டுக்கொண்டு உள்ளார்.

**பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு,குறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு**

தர்மபுரி,

பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

குறைதீர்க்கும் கூட்டம்

தர்மபுரி மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஆர்.லில்லி தலைமையில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்கள் அளித்தனர். இந்த கூட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா மோளையானூர் ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விவசாயிகள் திரண்டு வந்து ஒரு கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில், மோளையானூரில் 226 பேருக்கு வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 100–க்கும் மேற்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மஞ்சள், நிலக்கடலை, துவரை ஆகிய விவசாய பயிர்களை சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட நிவாரணம் பெற தகுதியுடைய பல சிறுகுறு விவசாயிகளின் பெயர்கள் வறட்சி நிவாரண பட்டியலில் இடம் பெறாமல் உள்ளன. அதேநேரத்தில் பாக்கு, தென்னை, யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கும் பல பெரிய விவசாயிகளுக்கு நிவாரண உதவி கிடைத்துள்ளது.

குறு, சிறு விவசாயிகள்

இதுதொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி வறட்சியினால் உண்மையாக பாதிக்கப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்கு நிவாரண உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தனர். இதேபோல் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் வேறு சில பகுதிகளை சேர்ந்த விவசாயிகளும் வறட்சி நிவாரணத்தை முறையாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மனுக்கள் அளித்தனர். பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்ற கலெக்டர் ஆர்.லில்லி அவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் தாசில்தாரிடம் மனு**

காங்கயம்,

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாசில்தாரிடம் மனு கொடுக்கப்பட்டது.

<u>வறட்சி</u>

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு, சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. பயிர்கள் கருகியதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு ஆளானார்கள். எனவே வறட்சி நிவாரணம் வழங்க வேண் டும். அப்போது தான் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து தமிழக அரசு வறட்சி நிவாரணம் வழங்க உத்தரவிட்டது. இதில் திருப்பூர் மாவட்டத்துக்கு தற்போது ரூ.76 கோடி வறட்சி நிவாரணமாக அறிவித்தது. ஆனால் பல விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை கிடைக்க வில்லை என்று புகார் எழுந்தது. இது தொடர்பாக காங்கயம் அருகே குட்டப்பாளையம், பழையகோட்டை, கண்ணியன்கிணறு, நத்தக்காடையூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் காங்கயம் தாசில்தாரை சந்தித்து மனு கொடுத்தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

<u>பயனாளிகள் பட்டியல்</u>

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைப்பதற்கான அரசாணையை தமிழக அரசு பிறப்பித்து உள் ளது. எந்த பாகுபாடும் இல்லாமல் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஆனால் எங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் அரசு அறிவித்த பயனாளிகளின் பட்டியலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர் சேர்க்கப்பட வில்லை.

இதனால் காங்கயம் ஒன்றியம் குட்டப்பாளையம் பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைப் பதற்கு வாய்ப்பு இருப்பதாக தெரிய வில்லை. தனியார் புரோக்கர்கள் சிலரின் உதவியுடன் முறைகேடாக பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளதாக கருதுகிறோம்.

<u>நடவடிக்கை</u>

இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் பெற முடியாத சூழல் ஏற்பட்டு உள்ளது. எனவே ஏழை விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் வகையில் பயனாளிகள் பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. அதை பெற்றுக் கொண்ட தாசில்தார், மனுவில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து சரியான விபரங் களை குறிப்பிட வில்லை என்று கூறினார். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயரை குறிப்பிட்டு மனு கொடுப்பதாக விவசாயிகள் கூறி சென்றனர்.

**நன்னிலம் பகுதியில் வெள்ளரிப்பழம் அறுவடை தீவிரம்**

நன்னிலம்

நன்னிலம் பகுதியில் வெள்ளரிப்பழம் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

## அக்னி நட்சத்திரம்

தமிழகம் முழுவதும் அக்னி நட்சத்திரத்தையொட்டி வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. இதனை தணித்து உடலை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள பொதுமக்கள் பல்வேறு பழங்களை சாப்பிட்டு வருகின்றனர். இதில் முக்கியமானது வெள்ளரிப்பழம்.

வெயிலின் தாக்கத்தை தொடர்ந்து வெள்ளரிப்பழம் விற்பனை அதிகரித்துள்ளது. நன்னிலம் அருகே உள்ள பூந்தோட்டம்– கூத்தனூர் கிராமத்தில் விவசாயிகள் வெள்ளரி சாகுபடி செய்துள்ளனர். இதுகுறித்து கூத்தனூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஜெயபாலை சந்தித்து கேட்டபோது அவர் வெள்ளரி சாகுபடி செய்த வயலுக்கு அழைத்து சென்றார். அப்போது அவர் கூறியதாவது:–

## வெள்ளரிப்பழம் சாகுபடி

வெள்ளரிப்பழம் சாகுபடி 60 நாட்களில் பலன்தரக்கூடிய பயிராகும். சாகுபடியில் பழத்திற்கு என்று தனி ரகமும், பிஞ்சுக்கென்று தனி ரகமும் உள்ளது. நான் செய்திருப்பது பழத்திற்கென்று உள்ள ரகமாகும். 1 ஏக்கர் வெள்ளரிப்பழ சாகுபடி செய்தால் 4 மாதத்தில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம். இதற்கு தண்ணீர் வசதி வேண்டும்.

முதலில் நிலத்தை கோடை உழவு செய்து கட்டிகளை உடைத்துவிட்டு அதன் பின்பு விதைகளை விதைக்க வேண்டும். பின்னர் தினமும் தண்ணீர் பாய்ச்சி உரமிட வேண்டும். 15 தினங்களில் கொடிபடர ஆரம்பிக்கும். 30–வது நாள் பிஞ்சு விடும். 60–வது நாள் பழமாகிவிடும். அப்போதிலிருந்து அறுவடை ஆரம்பமாகிவிடும். முதல் ஈட்டில் பழுக்கும் பழங்கள் 2 அடி நீளத்துடன் தரமாக இருக்கும். மொத்தம் 4 ஈடு அறுவடை செய்வோம்.

## விற்பனை

நன்கு பழுத்த பழங்களை முதல்நாள் மாலையே அறுவடை செய்வது நல்லது. இல்லையெனில் வெடித்துவிடும். அதிகாலை 6 மணிக்கு பழங்களை அறுவடைசெய்ய ஆரம்பிப்போம். நன்கு பழுத்த பழங்கள் வெடித்துவிடாமல் இருக்க பனை மட்டைகளை வைத்து கட்டிவிடுவோம். ஒரு பழம் விலை ரூ.10. அதிகபட்சமாக ரூ.30–க்கு விற்கப்படும்.

வியாபாரிகள் வயலிலேயே வந்து வாங்கிச்சென்றுவிடுவர். மேலும் வெளிநாட்டினரும் எங்களிடம் பழங்களை வாங்கிச்சென்றுள்ளனர். விற்பனை நடைபெறும் அளவுக்கு எங்களால் உற்பத்தி செய்யமுடியவில்லை. அரசு மானியமும், கடன் வசதியும் செய்து ஊக்கப்படுத்தினால் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். வெள்ளரிப்பழ சாகுபடி 60 தினங்களில் பணம் தரக்கூடிய ஒரு பணப்பயிர் என்று சொல்லலாம்.

இவ்வாறு விவசாயி ஜெயபால் கூறினார்.

**திருச்சி மாவட்டத்தில், விடுபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டரிடம் கோரிக்கை**

திருச்சி

திருச்சி மாவட்டத்தில் விடுபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண நிதியை வழங்க வேண்டும் என்று குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை வைத்தனர்.

விவசாயிகள் கோரிக்கை

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தலைமை தாங்கி, பொதுமக்களிடம் குறைகள் தொடர்பான மனுக்களை பெற்றார்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் பூ.விசுவநாதன் தலைமையில், 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலெக்டரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் அறிவிப்பின்படி, திருச்சி மாவட்டத்தில் வறட்சி நிவாரண நிதி விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்கள். ஆனால் மணப்பாறை, வையம்பட்டி, மருங்காபுரி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், துறையூர் ஆகிய தாலுகாக்களில் விட்டுப்போன, சேர்க்க மறந்து போன அனைத்து விவசாயிகளுக்கும், நெல் விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளனர்.

திருவெறும்பூரில் அரசு மருத்துவமனை

திருவெறும்பூர் வட்ட வளர்ச்சிக்குழு தலைவர் மாசிலாமணி மற்றும் நிர்வாகிகள் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், "திருவெறும்பூர் பகுதி அதிக விபத்துக்கள் நடைபெறும் பகுதியாகும். இங்கு வட்ட மருத்துவமனை மிக அவசியமானதாகும். அத்தகைய வட்ட அளவிலான அரசு மருத்துவமனை அமைப்பதற்கு திருவெறும்பூரின் மிக அருகில் அரசுக்கு சொந்தமான இடம் உள்ளது. இங்கு பொதுமருத்துவமனை அமைத்து தர வேண்டும்.

தாலுகா அலுவலகம்

திருச்சிமாவட்டம் மணப்பாறை வட்டம் மருங்காபுரி ஊராட்சி பகுதியை சேர்ந்த சிலர் கலெக்டரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில், "மணப்பாறை வட்டத்தை பிரித்து மருங்காபுரி வட்டம் ஏற்படுத்திய முதல்–அமைச்சருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தாலுகா அலுவலகத்தின் அனைத்து கட்டிடங்களையும் மருங்காபுரியிலேயே அமைக்க வேண்டும்" என்றும் கூறி இருந்தனர். அதேபோல் மருங்காபுரி தாலுகா அலுவலகத்தை துவரங்குறிச்சியில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றொரு தரப்பினரும் கோரிக்கை மனு கொடுத்தனர்.

திருச்சி தஞ்சைரோடு அல்முகம்மதியா பள்ளிவாசல் ஜமாத்தார்கள் மற்றும் வியாபாரிகள் கொடுத்த கோரிக்கைமனுவில்."திருச்சி காந்திமார்க்கெட் தஞ்சைரோடு தர்பார்மேடு பகுதியில் மக்கள்

நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாகும். ஆகவே இந்த பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும்“ என்று கூறி இருந்தனர்.

கூடுதல் ஆட்டோ ஸ்டாண்டு

ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் சங்கம் சார்பில் கொடுத்த கோரிக்கை மனுவில், “திருச்சி மாநகரில் தற்போது மக்கள் தொகை பெருகி வருகிறது. இதற்கேற்ப ஆட்டோ ஸ்டாண்டுகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும். தற்போது 10,000 ஆயிரம் ஆட்டோக்கள் உள்ள சூழ்நிலையில் 300 ஆட்டோ ஸ்டாண்டுகள் உள்ளன. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி, புதிய ஆட்டோ நிறுத்தங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்“ என்று கூறி இருந்தனர்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண் சார்ந்த பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வேண்டுகோள்

திருச்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண் சார்ந்த பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என வேண்டுகோள் விடப்பட்டு உள்ளது.

தேர்ச்சி சதவீதம்

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முதன்மையர் (டீன்) பாண்டியராஜன் வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி மற்றும் பி.டெக் போன்ற வேளாண் சார்ந்த பட்ட படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடங்களில் 50 சதவீத மதிப்பெண்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் 40 சதவீத மதிப்பெண்களும், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தவர்கள் மேல்நிலை கல்வி மற்றும் சம்பந்தப்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானதாகும்.

ஜூன் 7–ந்தேதிக்குள்...

இந்த கல்வியாண்டு முதல் மேற்கண்ட பட்டப்படிப்பிற்கு விண்ணப்பங்கள் நேரடியாக வழங்கப்படாது. மேலும் மாணவர்கள் இணைய தள வழிமுறையில் (http://tnau.ac.in/admission.html) விண்ணப்பித்து சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகலுடன் வரைவு காசோலைக்கான பணத்தை (பி.சி, எம்.பி.சி: ரூ. 625, எஸ்.சி, எஸ்.டி : ரூ.325) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்த ஒரு கிளையிலும் செலுத்தப்பட்டதற்கான ரசிதையும் மற்றும் கல்வி சான்றிதழ், சாதி சான்றிதழ் நகல்களையும் இணைத்து முதல்வர் (வேளாண்மை), தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள் 07.06.2013 ஆகும். மேலும் விவரங்களுக்கு முதல்வர், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தனி அலுவலர்(தோட்டக்கலை), நவலூர்குட்டப்பட்டு, திருச்சி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்

**வறட்சியால் பாதிக்கப்பட்ட 2¼ லட்சம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு**

ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்டத் தில் வறட்சியால் நெல் விவசாயம் பாதிக்கப் பட்ட சுமார் 2¼ லட்சம் விவசாயிகளுக்கு நிவார ணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யபப்பட்டுள்ளது.

நீர் ஆதாரம்

தமிழகத்தில் வறண்ட மாவட்டம் என்று பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட் டத்தின் நீர் ஆதாரம் வட கிழக்கு பருவமழையும், வைகை தண்ணீரும்தான். கடந்த கால வரலாறுகளில் இந்த நீர் ஆதாரங்கள் பெயரள விலேயே சொல்லப்பட்டு வருகின்றன. இதற்கு கார ணம் இந்த இரண்டுமே இந்த மாவட்ட மக்களுக்கு நிலையான பயனை அளிப்ப தில்லை. வைகை தண்ணீர் வராமல் கெடுத்து விடும். வட கிழக்கு பருவமழை பெய்து கெடுத்துவிடும். இது போன்ற சூழ்நிலையில் விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் நம்பிக் கையின் அடிப்படையில் விவ சாயம் செய்வதும், தண்ணீர் இல்லாமல் வறட்சியில் சிக் கிக்கொள்வதும் ஆண் டாண்டு காலமாக வழக்கத் தில் இருந்து வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டத் தில் கடந்த 70 ஆண்டு கால வரலாற்றில் குளிர்காலத்தில் 67.40 மில்லி மீட்டரும், கோடை காலத்தில் 122.70 மில்லி மீட்டரும், தென்மேற்கு பருவமழை 135.30 மில்லி மீட் டரும், வடகிழக்கு பருவ மழை 501.60 மில்லி மீட்டரு மாக மொத்தம் 827 மில்லி மீட்டர் ஆண்டு சராசரி மழை யளவாக உள்ளது. கடந்த 2010ம் ஆண்டுதான் வட கிழக்கு பருவமழை அதிகள வாக 838.94 மில்லி மீட்ட ரும், ஆண்டு சராசரி 1186 மில்லி மீட்டரும் பெய்தது. இதேபோல மிகக்குறைந்த அளவாக கடந்த 2003ம் ஆண்டு வடகிழக்கு பருவ மழை 393.80 மில்லி மீட்ட ரும், ஆண்டு சராசரி 566.90 மில்லி மீட்டரும் பெய்து கடும் வறட்சியை சந்தித்தது.

பயிர் காப்பீடு

இதற்கு அடுத்தாற்போல் கடந்த ஆண்டு 449.37 மில்லி மீட்டர் வடகிழக்கு பருவமழை யும், 598.54 மில்லி மீட்டர் ஆண்டு சராசரி மழையும் பெய்து இம்மாவட்ட மக்க ளின் விவசாய நம்பிக்கையை பொய்யாக்கியது. போதிய மழை பெய்யாததால் விவசா யத்திற்கு மட்டுமின்றி குடிநீர் தேவைக்கும் தண்ணீர் இல் லாமல் போய்விட்டது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் 93 ஆயிரத்து 602 விவசாயிகள் ரூ.214 கோடியே 43 லட்சத் துக்கு பயிர்காப்பீடு செய்துள் ளனர்.

கடந்த 201112ம் ஆண்டில் 851 விவாசாயிகள் ரூ.53 கோடியே ரூ.39¾ லட்சத்துக்கு மட்டுமே பயிர் காப்பீடு செய் திருந்தனர். இதேபோல கடந்த ஆண்டு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 435 மிளகாய் விவ சாயிகள் ரூ.14 கோடியே 72 லட்சத்து 90 ஆயிரத்துக்கு பயிர் காப்பீடு செய்துள்ளனர். தமிழக அரசு 50 சதவீதத்துக்கு மேல் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரண தொகை அறிவித்துள்ளது. இதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் 2 லட்சத்து 24 ஆயிரத்து 817 விவசாயிகளுக்கு ரூ.131 கோடியே 68 லட்சத்து 36 ஆயிரத்து 990 ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

நிவாரண தொகையினை சம்பந்தப் பட்ட விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக்கொள் ளலாம்.